# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 புரட்டாதி 27 சனிக்கிழமை (13-10-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:321


நேற்று ஒரே நாளில் கட்சித் தாவல்

## அனுராவும், சரத் முனசிங்கவும் எதிரணிகளில் இணைந்தனர்!

ஐ.தே.கட்சிப் பிரமுகரும், சபாநாய கருமான அனுரா பண்டாரநாயக்கா நேற்று பொதுமக்கள் ஐக்கிய முன்ன ணியில் இணைந்துகொண்டார்.

அதேவேளை, மறுபக்கத்தில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பிரமுகரும் உப சபாநாயகருமான மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க ஐ.தே.கட்சியில் சேர்ந்துகொண்டார்.

ஒரேநாளில் இந்த இரு முக்கிய பிரமுகர்களும் மாறிமாறி எதிரணி களில் இணைந்துகொண்டனர்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி யில் இணைந்த அனுரா பண்டார நாயக்கா, கம்பஹா மாவட்டத்தில் முதன்மை வேட்பாளராகப் போட்டி யிடவிருக்கின்றார்.

ஐ.தே.கவில் இணைநதுள்ள சரத் முனசிங்க, ஐ.தே.கட்சி சார்பில் குரு நாகல் மாவட்டத்தில் முதன்மை வேட பாளராகப் போட்டியிடுவார்.

இவர்கள் இருவரும் தங்களது தற் போதைய பதவிகளை இராஜினாமாச் செய்துள்ளனர். (ஐ-3)

## ஆப்கான் மீதான தாக்குதலைக் கண்டித்து கொழும்பில் நேற்றுப் பெரும் ஆர்ப்பாட்டம்!

### புஷ்ஷின் கொடும்பாவி எரிப்பு! பொலீஸார் கண்ணீர்ப்புகை!

கொழும்பு,ஒக்.13

ஆப்கானிஸ்தான்மீது அமெரிக்கா நடத்திவரும் தாக்குதலைக் கண்டித்து நேற்று கொழும்பிலும் நாட்டின் ஏனைய சில இடங்களிலும் முஸ்லிம் மக்கள் பெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்தி யிருக்கின்றனர்.

கொழும்பில் மருதானை, கொம் பனித்தெருவில் நேற்று நண்பகல் ஜும்மா தொழுகையை அடுத்து சுமார் 5ஆயிரம் முஸ்லிம்கள் பள்ளி வாசல்களுக்கு முன்பாகப் பெரும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

பின்லேடனின் உருவப்படங்கள் மற்றும் அமெரிக்காவிற்கு எதிரான கண்டனச் சுலோக அட்டைகள் ஆகிய வற்றை வைத்திருந்த ஆர்ப்பாட்டக் காரர்கள் அமெரிக்காவுக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பினர்.

அமெரிக்க ஜனாதிபதி, ஐநா.செய லாளர் நாயகம் ஆகியோரின் கொடும் பாவிகளும், அமெரிக்கா மற்றும் ஐநா. கொடிகளும் அங்கு தீக்கிரையாக்கப் பட்டன. ஆர்ப்பாட்டக்காரர்கள் பின்னர் அங்கிருந்து கொள்ளுப்பிட்டி நோக்கி நகர ஆரம்பித்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் வியூகம் தொடர்பான பேச்சுக்கள் தொடர்கின்றன

# கூட்டணி, ரெலோ, சுரேஷ் அணி ஒன்றாகப் போட்டியிட இணக்கம்

## யாழ்ப்பாணத்தில் தனித்து நிற்க தமிழ்க் காங்கிரஸ் விருப்பம்

கொழும்பு,ஒக்ரோபர்13

**பொதுத் தேர்தலுக்கான கூட்டணி ஒன்றை அமைப்பது தொடர்பாக தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகள் தொடர்ந்து பேச்சுக்களில் ஈடுபட்டுவருகின்றனர்.**

**கடந்த இரு தினங்கள் இடம்பெற்ற பேச்சுக்களின்போது, யாழ்.மாவட்டம் உட்பட வடக்கு - கிழக்கில் ஓரணியில் போட்டியிட தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) ஆகிய கட்சிகள் தமக்குள் இணக்கம் கண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

தமிழர் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்துகொள்வதற்காக யாழ்ப்பாணம், திருகோணமலை, அம்பாறை, மட்டக் களப்பு ஆகிய மாவட்டங்களில் ஒன்றி ணைந்து போட்டியிடுவது என்று இந்த மூன்று தமிழ்க் கட்சிகளும் இணக்கம் கண்டுள்ளன.

எனினும் இது விடயமாக இந்தக் கட்சிகளுக்கிடையே தொடர்ந்தும் கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்று வருகின்றன.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் யாழ்.மாவட்டத்தில் தனித் துப் போட்டியிட விருப்பம் தெரிவித்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரச ஊழியருக்கு 1,200ரூபா! ஓய்வூதியர்களுக்கு 750ரூபா!

### இம்மாதம் முதல் இடைக்காலப்படி

கொழும்பு,ஒக்.13

அரச ஊழியர்களுக்கு ஆயிரத்து 200 ரூபாவும், ஓய்வூதியர்களுக்கு 750 ரூபாவும் இம்மாதம் முதல் இடைக காலக் கொடுப்பனவாக வழங்கப்பட வுள்ளது.

இது தொடர்பான அறிவிப்பை அரசு நேற்று வெளியிட்டிருக்கிறது.

அரச ஊழியர்களின் சம்பள அதி கரிப்புக் குறித்து சம்பள ஆணைக் குழு ஆராய்ந்து வருகின்றது என் றும் -

அந்த ஆணைக்குழுவின் பரிந் துரைகள் நடைமுறைப்படுத்தப்படும் வரை இந்த இடைக்காலக் கொடுப் பனவு வழங்கப்படும் என்றும் -

தெரிவிக்கப்பட்டுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கட்சிகளின் கூட்டில் இணைய புளொட் விருப்பம்

வவுனியா,ஒக்.13

தமிழ் மக்களின் நலன்கள் மற் றும் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்குடன், தமிழ்க் கட்சிகள் ஒன்று சேர்ந்து கூட்டணி அமைத்தால் அதில் இணைந்துகொள்ளத் தயாராக இருப்ப தாக புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்த தாவது:-

ஐ.தே.கவும் பொதுமக்கள் ஐக் கிய முன்னணியும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான். இந்த இரு பிரதான கட்சிகளும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு ஒன்றைக் காணும் என நம்பமுடியாது.

தமிழ்க் கட்சிகள் யாவும் ஒன்று சேர்ந்து ஓரணியில் போட்டியிட்டு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டணி கொழும்பிலும் போட்டியிடும்

கொழும்பு,ஒக்.13

எதிர்வரும் தேர்தலில் கொழும்பு மாவட்டத்திலும் போட்டியிட தமிழர் விடுதலைக் கூட்டணி முடிவு செய்துள் ளதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரி வித்தன.

கொழும்புத் தமிழர்களின் பிரதி நிதித்துவத்தை உறுதிசெய்யும் வகை யில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கட்சிகளின் கூட்டணியில் போட்டியிட மகேஸ்வரன் மறுப்பு!

கொழும்பு,ஒக்.13

எதிர்வரும் தேர்தலில் தமிழ்க் கட்சிகளின் கூட்டணியின் வேட்பாள ராகப் போட்டியிடப்போவதில்லை என்று ஐதேகவின் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் தனது கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்திருக் கிறார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஸ் அணி), தமிழ்க் காங்கிரஸ் ஆகியன இணைந்து அமைக்கவிருக்கும் கூட்ட ணியில் சேர்ந்து போட்டியிடுமாறு ரணில் விக்கிரமசிங்க மகேஸ்வரனி டம் கேட்டிருப்பதாகவும் -

இதனால் அதிருப்தி அடைந்த மகேஸ்வரன், நேற்று ரணிலை நேரில் சந்தித்து தனது நிலைப்பாட்டை அவரிடம் தெரியப்படுத்தியதாகவும் -

தெரிவிக்கப்படுகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நீர்ப்பாசனத் திணைக்களத்தின் வாகனம் கண்ணியில் சிக்கியது!

### பதவியாவில் இரு சிவிலியன்கள் பலி

வவுனியா,ஒக்.13

வெலிஓயாவில் பதவியாப் பகுதி யில் நேற்றுக்காலை 9.40 மணியள வில் நீர்ப்பாசனத் திணைக்களத் தின் 'டபிள்கப்' வாகனம் ஒன்று கிளை மோர்க் கண்ணியில் சிக்கியதில் இரு பொதுமக்கள் உயிரிழந்தனர்.

அந்த வாகனத்தின் சாரதியான ஆர்.எம்.ஜெயசிங்கவும் தொழில்நுட்ப உதவியாளர் ஹெட்டியாராய்ச்சி என் பவருமே இச்சம்பவத்தில் உயிரிழந்த தாக விசேட ஊடகத் தகவல் நிலை யம் தெரிவித்துள்ளது.

தாக்குதலை அடுத்து, அங்கு விரைந்து சென்ற வெலிஓயா முகாம் படையினரும் பொலீஸாரும் தேடுதல் களை நடத்தினர்.

பதவியாப் பகுதிக்குள் ஊடுரு விய விடுதலைப் புலிகளே இந்தக் கண்ணித் தாக்குதலை நடத்தியிருப் பதாகப் படைவட்டாரங்கள் தெரிவித் தன. (ஐ-3-7)

## ஐ.நாவுக்கும் அனானுக்கும் நோபல் பரிசு

ஒஸ்லோ,ஒக்.13

இந்த ஆண்டுக்குரிய (2001) சமா தானத்துக்கான நோபல் பரிசு ஐ.நா. சபைக்கும், அதன் செயலாளர் நாய கம் கோபி அனா னுக்கும் (வயது 63) கூட்டாக வழங்கப்பட்டுள் ளது.



மனித உரிமைகளை மேம்படுத் தவும், உலகளாவியரீதியில் நெருக்கடி நிலையைத் தவிர்ப்பதற்காகவும், ஆற் றிய பணிகளுக்காக ஐ.நாவுக்கும், அதன் செயலாளர் நாயகத்துக்கும் இந்தப் பரிசு வழங்கப்படுவதாக நோர் வேயில் உள்ள " நோபல்" பரிசுக் குழு அறிவித்திருக்கிறது. (ஐ-7)

## விடுதலைப் புலிகளிடம் நாட்டை தாரைவார்க்க ஐ.தே.க. முயற்சியாம்!

### சாடுகிறார் விமல் வீரவன்ஸ

கொழும்பு,ஒக்.13

விடுதலைப் புலிகளின் ஏவலினா லேயே பொதுமக்கள் ஐக்கிய முன் னணி அரசு பதவி கவிழ்க்கப்பட்டி ருக்கிறது.

ஜே.வி.பியின் பிரசாரச் செயலா ளர் விமல் வீரவன்ஸ இவ்வாறு கூறி யிருக்கிறார்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததா வது:-

ஐ.தே.க. தலைவர் ரணில் விக் கிரமசிங்கவை ஆட்சியில் ஏற்றி நினைத்ததைச் சாதிக்க விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# நகரில் சுடப்பட்ட இளைஞன் ஈ.பி.டி.பி. உறுப்பினர் அல்லர்

## ஊடக நிலைய அறிக்கைக்கு ஜெகன் மறுப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.13

யாழ்.கஸ்தூரியார் வீதி - நாவலர் வீதிச் சந்தியில் கடந்த புதனன்று சுட்டுக்கொல்லப்பட்ட போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் தொண்டர் ஈ.பி.டி.பி. அமைப்பின் உறுப்பினர் என வெளியாகியிருக்கும் செய்தி உண்மைக்குப் புறம்பானதாகும்.

ஈ.பி.டி.பி. அமைப்பின் யாழ்மாவட்ட அமைப்பாளர் வி.கே.ஜெகன் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

யாழ்.நகரில் சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞர் ஈ.பி.டி.பி. உறுப்பினர் என்று தகவல் திணைக்களப் பணிப்பாளரால் ஒப்பமிட்டு விசேட ஊடகத் தகவல் நிலையம் நேற்று முன்தினம் வெளியிட்ட களநிலைவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கை நேற்றைய உதயனில் செய்தியாக வெளியாகியிருந்தது.

விசேட ஊடகத் தகவல் நிலையம் விடுத்த அந்த அறிக்கையில் கூறப்பட்ட தகவலே உண்மைக்குப் புறம்பானது என்று ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் தெரிவித்திருக்கிறார்.

இது தொடர்பாக நேற்று அவர் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ்.நாவலர் வீதிச் சந்தியில் கடந்த 10 ஆம் திகதி துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்த ஸ்ரீஸகந்தராசா விமலேஸ்வரன் வீதிப் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் தொண்டராவார்.

போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு பொலீஸ் திணைக்களத்தின் அனுசரணையுடன் வீதிவிபத்துக்களைத் தவிர்க்கும் வகையில் பொதுமக்களின் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது தெரிந்ததே.

பொதுப் போக்குவரத்துச் சீர் செய்யப்படாமல் இருந்ததால் வீதி விபத்துக்கள் அடிக்கடி நிகழ்ந்து வந்தது நினைவுகூரத்தக்கது.

இந்நிலையில் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் சேவையில் ஈடுபடுத்தியமை குடாநாட்டு மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

பொதுமக்கள் மத்தியில் இயல்பு வாழ்க்கை திரும்புவதை விரும்பாத சக்திகள் சமூகச் சீர்குலைவிற்கான நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதன் ஓர் அங்கமாகவே இந்தப் படுகொலைச் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

எனவே அரசியற் கட்சி உறுப்பினர் என்று அடையாளப்படுத்தி அவருடைய கொலைக்கு நியாயம் தேடுவது அர்த்தமற்றதாகும். இத்தகைய செயல்கள் சோகத்தில் துவண்டுபோயிருக்கும் குடும்ப உறுப்பினர்களை மேலும் சங்கடங்களுக்கு உள்ளாக்குவதாகவும் இருக்கும் - என்று அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ-7)

# எரிபொருள் வகைகள் போதியளவு கையிருப்பில்

## கூட்டுத்தாபன வட்டாரங்கள் தகவல்

யாழ்.குடாநாட்டில் போதியளவு எரிபொருள்கள் கையிருப்பில் உள்ளதாகப் பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன.

குடாநாட்டில் கடந்த சில தினங்களாக எரிபொருளுக்குத் தட்டுப்பாடு நிலவிவருகிறது. பல எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் வாகனங்கள் நீண்ட 'கியூ'வில் காணப்படுகின்றன. சில எரிபொருள் விநியோக நிலையங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே எரிபொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலைமை குறித்து பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ். பிராந்திய நிலைய வட்டாரங்களில் விசாரித்தபோது தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா தொடுத்திருக்கும் தாக்குதல் காரணமாக உருவாகி இருக்கும் போர்ச் சூழ்நிலையால் எரிபொருள் வகைகளுக்கு உலகளாவிய ரீதியில் தட்டுப்பாடு ஏற்படலாம் என்று எதிர்பார்த்து பாவனையாளர்கள் எரிபொருள்களை பெருமளவில் வாங்கிச சேகரிக்க முனைந்துள்ளனர்.

மக்கள் தாங்களாகவே செயற்கைத் தட்டுப்பாட்டை உருவாக்கி வெளிக் கடைகளில் எரிபொருள்களின் விலையை உயர்வடையச் செய்கின்றார்கள்.

குறிப்பிட்ட கால இடைவெளிகளில் யாழ்ப்பாணத்திற்கு எரிபொருள்கள் வந்துகொண்டே இருக்கின்றன. எனவே தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பே இல்லை. இதனால் மக்கள் அச்சமடைய வேண்டிய அவசியமில்லை.

இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-9)

# சான்றிதழ் வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம்,ஒக்.13

யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் யாழ்.மாவட்டம் தரம் 'சி' சித்தியடைந்த நடுவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்.மேலதிக அரச அதிபர் துவைதலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

நடுவர் பரீட்சையில் சித்தியடைந்து சான்றிதழ் பெறுபவர்களின் விவரம் வருமாறு:-

செல்வி கமலா விநாசித்தம்பி, திருமதி நீலலோஜனி தர்மகுலசிங்கம், செல்வி மதிவதனா சுந்தரலிங்கம், செல்வி சுரேந்தினி சிதம்பரநாதன, செல்வி இராதை அருளம்பலம், செல்வி சிவசோதி நரேந்திரன், செல்வி தேவா சின்னத்தம்பி, செல்வி மைதிலி பூபாலசிங்கம், செல்வி யசிந்தா நல்லையா, பாலகிருஷ்ணன் ஜெயகேசவன், செல்வி சுபாஜினி கந்தையா, நரேந்திரராஜ் இராஜமுகுந்தன், துரைராஜசிங்கம் வாகீசன், செல்வி தமிழரசி சரவணசிவா, திருமதி ஜெயவந்தகுமாரி சரவணபவஐயர், செல்வி சத்தியமதி இராஜதுரை, செல்வி சந்திரமதி தவராஜா, செல்வி காந்திமதி தவராஜா, செல்வி அனுசியா ஜெறாலின் வின்சலம், பேட்டி பெனிஸ்ரர் மரியதாஸ், செல்வி ஞானேஸ்வரி திருநாவுக்கரசு, செல்வி உதயசுதர்சினி இராஜரட்ணம், திருமதி கிருபாசக்தி சிவராஜா. (ஐ-3)

# தேர்தல் செலவு 65 கோடி ரூபா

கொழும்பு,ஒக்.13

டிசெம்பர் மாதம் நடத்தப்படவுள்ள பொதுத்தேர்தலுக்கு சுமார் 65 கோடி ரூபா தேவை என உதவித் தேர்தல் ஆணையாளர் கே.சேனாநாயக்க அறிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு தயாரிக்கப்பட்ட வாக்காளர் பட்டியலின்படி இம்முறை பொதுத்தேர்தல் நடைபெறும் என்றும் - இந்த வாக்காளர் பட்டியல் தயாரிப்புக்கென சுமார் ஒரு கோடி 24 லட்சம் ரூபா செலவிடப்பட்டது என்றும் - அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# வடக்கு - கிழக்கில் போட்டி

எதிர்வரும் பொதுத்தேர்தலில் புதிய ஜனநாயகக்கட்சி வடக்கு - கிழக்கு, மலையகம், கொழும்பு ஆகிய மாவட்டங்களில் போட்டியிடும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா.செந்திவேல் தெரிவித்துள்ளார்.

கட்சியின் அரசியல் குழு கூடி இந்த முடிவை எடுத்துள்ளதாக அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுக்கொள்கைத் திட்டம் ஒன்றின் அடிப்படையில் தமது கட்சி இந்தத் தேர்தலில் போட்டியிடவிருக்கின்றது என்றும் - இந்தக் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளும் இடதுசாரி அமைப்புக்களுடன் இணைந்து போட்டியிடுவது குறித்து அவற்றுடன் பேச்சு நடத்தி வருவதாகவும் - அவர் தெரிவித்துள்ளார். (ஐ-3)

# குருக்கள் மடத்தில் திடீர் சோதனை

கொழும்புத்துறை, வளன்புரம் பகுதியில் அமைந்துள்ள கத்தோலிக்க குருக்கள் மடத்தில் நேற்று அதிகாலைவேளை படையினர் திடீர் சோதனை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று அதிகாலை இந்தக் குருக்கள் மடத்தினுள் திடீரெனப் பிரவேசித்த பெரும் எண்ணிக்கையான படையினர் அங்கு தங்கியிருந்த அருட் சகோதரர்களை உடற் பரிசோதனை செய்தனர். அத்துடன் அந்த வளாகத்திலும் சுமார் ஒரு மணிநேரம் தீவிரசோதனை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)


## எழுதுவினைஞர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பணக் கொடுக்கல் வாங்கல்களுடன் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு எழுதுவினைஞர் இருபாலாரும் தேவை.

தகைமை:

க.பொ.த. (உயர்தரம்) பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்திருப்போரும் விண்ணப்பிக்கலாம். கம்பியூட்டர் அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி: 20-10-2001

(93404) தொடர்பு:-விள.இல. 1974, மே/பா உதயன்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஏழாலை மேற்கு
சைவ சன்மார்க்க வித்தியாசாலை மாணவி
செல்வி ஜெயலிங்கம் பிரியா
(140 புள்ளிகள்)

2001ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 140 புள்ளிகளைப் பெற்று பாடசாலையில் முதன்மை மாணவியாகச் சித்தியடைந்தமைக்காக அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவருக்கு கல்வியறிவு புகட்டிய அதிபர், ஆசிரியர்களுக்கும் மற்றும் ரியூசன் ஆசிரியர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*வாழ்த்துபவர்கள்:*
தாத்தா: வ. செல்லையா (சாமியார்),
(முன்னாள் உரிமையாளர்,
அசோகா காட்வெயர் ஸ்ரோர்ஸ், திருகோணமலை)
அப்பா: செ.ஜெயலிங்கம்,
(பிரியா ஸ்ரோர்ஸ், சுன்னாகம்)
அம்மா: திருமதி ஜெ.சிவலோகநாயகி,
சித்தி: திருமதி ஜெ.திருலோகநாயகி (சுவிஸ்). (93375)

*ஏழாலை மத்தி,*
*ஏழாலை.*



## கண்ணீர் அஞ்சலி

*மக்கள் வங்கி சுன்னாகம் கிளையில் கடமையாற்றும் எமது சக ஊழியர்*
**விமலாதேவி ஜெயராஜா**
அவர்களின் அன்புத் தந்தையார்
**தியாகராஜா நடராஜா அவர்கள்**

12-10-2001 காலமானதையிட்டு அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன் புரிச்சங்கம்
மக்கள் வங்கி, சுன்னாகம்.
(C/18688)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி வீரகத்தி (இரத்தினம்) சிவபாக்கியம்

கரம்பனைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி சிவபாக்கியம் நேற்று (12.10.2001) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வீரகத்தியின் அன்பு மனைவியும் பாலாம்பாள், மகேந்திரன், கோகிலாதேவி, சசிகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் வரசிங்கம், டகிலானந்தன், கமலகுமாரி, சுகந்தினி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (13.10.2001) சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சசிகுமார் (குமார்) (மகன்)

*கும்பளாவளைப் பிள்ளையார் கோயிலடி,*
*அளவெட்டி மத்தி.* (93402)

## தியாகராசா நடராசா

சுன்னாகம் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா நடராசா நேற்று (12.10.2001) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும் லீலாவதி (ஓய்வுபெற்ற ஆசிரியை), காலஞ்சென்ற சிவலிங்கசோதி மற்றும் விமலாதேவி (மக்கள் வங்கி, சுன்னாகம்), சிவானந்தசோதி (சுன்னாகம் ப.நோ.கூ. சங்கம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசேந்திரம் (கனடா), சரோஜாதேவி, காலஞ்சென்ற ஜெயராசா மற்றும் லலிதமனோகரி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்ற மைதிலி மற்றும் திருமதி தர்மினி ஸசீகரன், முரளீதரன், திருமதி குமுதினி தயாபரன், திருமதி கமலினி அகிலன், தயாளினி, நடேசன், சபேசன், கோபி, நிருபா, சங்கதா ஆகியோரின் அருமைப் பேரனும் அனுஷனின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2001) சனிக்கிழமை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பூவோடை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந.சிவானந்தசோதி (மகன்)

*இலங்கை வங்கி ஒழுங்கை,*
*சுன்னாகம் தெற்கு.* (93403)

## திருமதி இராசரத்தினம் சரஸ்வதி

தென் புலோலியைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி கனகபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட, திருமதி இராசரத்தினம் சரஸ்வதி 08.10.2001 கிளிநொச்சியில் காலமானார்.

அன்னார் இ.இராசரத்தினத்தின் மனைவியும், தயாநிதி, கருணகுமார் (ஜேர்மனி), உமாநிதி, வரதராஜா (பிரான்ஸ்), திருமதி விஜியநிதி இராசேந்திரம் (ஆசிரியை, கனகபுரம் மகா வித்தியாலயம், கிளிநொச்சி) ஆகியோரின் அருமைத் தாயாரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி சந்திரகாந்தன் (பெறாமகன்)

*முதலாம் கட்டை,*
*பருத்தித்துறை.* (C-18687)

## துரையப்பா பாக்கியநாதன்

புதுவளவு, ஈவினை, புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா பாக்கியநாதன் நேற்று வெள்ளிக்கிழமை (12-10-2001) லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா - பாக்கியம் தம்பதியினரின் புதல்வனும், புகையிரத ஒழுங்கை, கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி (லிகிதர்) - மங்கையர்க்கரசி தம்பதியினரின் மருமகனும், ரேவதியின் (லண்டன்) அன்புக் கணவரும் அச்சுதனின் (லண்டன்) அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18-10-2001 வியாழக்கிழமை அன்று லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்; நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
செல்லையா செல்வரத்தினம்.

*புதுவளவு, ஈவினை,*
*புன்னாலைக்கட்டுவன்.* (C/18690)

## பொன்னம்பலம் விஜயரத்தினம்

மூளாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் விஜயரத்தினம் நேற்று (12.10.2001) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் (மலேசியன் பென்சனியர் M.C.H.) - இலட்சுமிப்பிள்ளையின் கனிஷ்ட புத்திரனும் புவனேஸ்வரியின் பாசமிகு கணவரும் பொன்னம்பலம் (சவூதி), கனகசபாபதி (ப.நோ. கூ.சங்கம் - சங்கானை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இளைப்பாறிய Dr.இரத்தினசபாபதி (R.D.H.S, யாழ்ப்பாணம்), காலஞ்சென்றவர்களான திருமதி சோ.சரஸ்வதி, கனகசபாபதி (கணக்காளர்), நடனசபாபதி, பாலரத்தினம் ஆகியோரின் பாசமிகு தம்பியும் திருமதி பரஞ்சோதி புவனேஸ்வரியின் பாசமிகு அண்ணனும் திருமதி செல்வம் சோமசுந்தரம், திருமதி பரமேஸ்வரி பரஞ்சோதி (கொழும்பு), திருமதி புவனேஸ்வரி, திருமதி புனிதவதி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2001) சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பித்தனை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வி.கனகசபாபதி (பாபு - மகன்)

*மூளாய் மத்தி,*
*சுழிபுரம்.* (C/18689)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**2001 - 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய யா/புற்றளை மகாவித்தியாலய மாணவர்கள்**

**செல்வன் சிவநாதன் சிவராம் (128 புள்ளிகள்)**

**செல்வன் சிவநாதன் ஜெயராம் (119 புள்ளிகள்)**

**யா/வட இந்து மகளிர் கல்லூரி மாணவி**

**செல்வி பாலச்சந்திரன் ரோகினி (121 புள்ளிகள்)**

ஆகியோரின் கல்வி வளர்ச்சிக்கு எம் குலதெய்வமாகிய வேம்படி ஞான வைரவர் அருள்புரிவாராக.

இம் மாணவர்களையும் இவர்களை நெறிப்படுத்தியவர்களையும் நாங்கள் பாராட்டி வாழ்த்துகின்றோம்

*பெரியமாமா குடும்பம்,*
*பெரியப்பாமார் குடும்பம்,*
*சித்தப்பா குடும்பம்,*
*சின்னமாமா குடும்பம், அன்ரி.*

*235, வி.மு.வீதி,*
*பருத்தித்துறை.* (93359)



## 4ஆம் ஆண்டு நீங்கா நினைவலைகள்



## அமரர் சண்முகம் இராஜலிங்கம்

(ஓய்வுபெற்ற சிரேஷ்ட கணக்காய்வாளர்)

**திதி: ஏகாதசி 13.10.2001**

*'ஓடிற்றர்' என்று அன்பாய் அழைப்பார்களே!*
*எங்கள் அன்புக் கடலே! அறிவுச்சுடரே!!*
*எம் ஆருயிர் அப்பாவே! ஆசானாய் வாழ வழிகாட்டினீர்!*
*பிரிந்து நான்கு ஆண்டுகளாயினும் - உங்கள்*
*நினைவு என்றும் எங்கள் நெஞ்சைவிட்டகலாது!*

(93389)

பிரிவால் வருந்தும்
**மனைவி, மகள், உறவினர்கள்.**

*காளிகோயிலடி,*
*அச்சுவேலி தெற்கு.*



## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்
## யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம், மானிப்பாய், பூம்பந்தல் என்னும் இடத்தில் வசித்து காலஞ்சென்ற நாகலிங்கம் இராஜ்நாதன் என்பவரின் மரண சாதனம் விட்டிறந்த மரணச் சொத்துக்கள் சம்பந்தமாக.

வழ. இல. தத்துவம்/22

மரணமெய்தியவர்
நாகலிங்கம் சண்முகநாதன்,
பூம்பந்தல், மானிப்பாய்.
மனுதார்

எதிராக

நாகலிங்கம் மகள் சரஸ்வதி,
பூம்பந்தல், மானிப்பாய்.
எதிர்வாதி

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவர் மரணசாதனத்தை விட்டு இறந்தமையால் அவரின் மரணச்சொத்தை நிருபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 2001ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 18ஆம் திகதி முற்பகல் 9.00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

2001ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 04ஆம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி,
து.சிறீமோகன்
*பதிவாளர்,*
*மாவட்ட நீதிமன்றம்,*
*யாழ்ப்பாணம்.*

வரைந்தது:
இ.வசந்தசேனன்,
*மனுதாரின் சட்டத்தரணி.* (93376)



## கண்ணீர் அஞ்சலி

எமது அன்புக்கும், மதிப்புக்கும் உரிய தலைவர்

**உயர்திரு. நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி**

அவர்களின் பாசமிகு தாயார்

## திருமதி நமசிவாயம் மனோன்மணி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா எல்லாம்வல்ல நயினை ஸ்ரீ நாகம்மையின் பாதார விந்தங்களைச் சென்றடையப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*உபதலைவர், செயலாளர்,*
*உறுப்பினர்கள்,*
*உத்தியோகத்தர்கள்,*
*ஊழியர்கள்,*

*வேலணை பிரதேச சபை.*

(C/18673)


## மெய்வன்மை போட்டிகள்

தென்மராட்சி,ஒக்.13

வல்வை சிவகுரு வித்தியாலயத்தில் இயங்கும் சரஸ்வதி முன்பள்ளி சிறார்களின் மெய்வன்மைப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சி.சிவபாலசிங்கம் தலைமையில் வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

நிகழ்வில் மங்கல விளக்கை பளை பிரதேச சபைத் தலைவர் வே. நவரத்தினமும், முன்பள்ளி கொடியை வல்வை நகர சபைத் தலைவர் எம்.கே.சிவாஜிலிங்கமும் ஏற்றிவைக்க, போட்டியினை ஈ.பி.டி.பியின் உடுப்பிட்டித் தொகுதி இணைப்பாளர் ச. யோகராசா ஆரம்பித்து வைப்பார்.

நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாகப் பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி, தென்மராட்சி பிரதேச செயலர் பு.சுந்தரம்பிள்ளை, பளைப் பிரதேச செயலர் சு.புத்திசிகாமணி ஆகியோர் கலந்துகொள்வர். (க-117)

★ ★ ★

வியாபாரிமூலை வசந்தம் கலைக்கூட முன்பள்ளி சிறார்களின் மெய்வன்மைப்போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் சி.சோமபாலன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி கல்வி வலய (குழந்தைப் பருவ) உதவிக் கல்விப் பணிப்பாளர் துரை.சத்தியசீலன், துன்னாலை காசிநாதர் வித்தியாலய அதிபர் தா. பரமானந்தம் ஆகியோரும் கலந்து கொள்வர். (க-117-173)

## மாதாந்த உதவிப் பணம்

தென்மராட்சி,ஒக்.13

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கான ஒக்ரோபர் மாதக் கொடுப்பனவுகள் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி அஞ்சல் அலுவலகம், மிருசுவில், மந்துவில் உப அஞ்சல் அலுவலகங்கள் ஆகியவற்றில் இக்கொடுப்பனவைப் பெறுவோர் கரவெட்டி அஞ்சல் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-117)

## புதிய கிளை அமைப்பு

தென்மராட்சி,ஒக்.13

வலிகாமம் கிழக்குப் பகுதிகளான கோப்பாய், இருபாலை, கட்டைப்பிராய், நீர்வேலி ஆகிய இடங்களில் தங்கியுள்ள மக்களின் நலன் கருதி சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் கோப்பாய் சந்தியில் கிளை ஒன்றினை அமைக்கவுள்ளனர்.

இதேவேளை -

தற்போது கோப்பாய் - உரும்பிராய் வீதியில் உள்ள கிளைக் கடையினை, உரும்பிராய் சந்தையிலுள்ள கட்டடம் ஒன்றுக்கு மாற்றவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

## சாகித்திய விழா போட்டிகள்

தென்மராட்சி,ஒக்.13

கரவெட்டி பிரதேச செயலக கலாசார பேரவையினரின் சாகித்திய விழாவுக்கான போட்டிகள் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன.

பிரதேச கலைஞர்களுக்கான போட்டிகள் இன்றும், கரவெட்டி கோட்ட பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகளும் தனிப்பட்டவர்களுக்கான கவிதை, சிறுகதை ஆகிய போட்டிகளும் நாளையும் நடைபெறுமென பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தெரிவித்தார். (ம-117)

## சங்கக் கிளையில் சூறையாடப்பட்ட பொருள்கள் மதிப்பீடு

தென்மராட்சி,ஒக்.13

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் உரும்பிராய்க் கிளையில் அண்மையில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்தில் ஒரு லட்சத்து 25ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

நிவாரணத்திற்கென வைக்கப்பட்டிருந்த பொருள்களும் ஏனைய நுகர்வுப் பொருள்களும் சூறையாடப்பட்டுள்ளதாகவும், இத்திருட்டுத் தொடர்பாக கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் சங்கப் பொதுமுகாமையாளர் தெரிவித்தார். (க-117)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## இலங்கை
### புதிய அனுமதிகள்
### நுண்கலைமாணி (இசை/நடனம்)

மேற்படி கற்கை நெறிகளுக்கு 2000/2001 கல்வியாண்டுக்கு புதிய அனுமதிகளுக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் பெயர்ப் பட்டியலை யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி அலுவலக விளம்பரப் பலகையில் பார்வையிடலாம்.

இவர்களுக்கான பதிவுகள்

**நுண்கலைமாணி - இசை - 18.10.2001 அன்றும்**
**நுண்கலைமாணி - நடனம் - 19.10.2001 அன்றும்**
**காலை 9 மணிக்கு** யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறும்.

**நுண்கலைமாணி - சித்திரமும் வடிவமைப்பும்** கற்கை நெறிக்கு எழுத்துப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கு தகுதியானவர்களின் பெயர்ப் பட்டியலையும் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி அலுவலக விளம்பரப் பலகையில் பார்வையிடலாம்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை - **17.10.2001** புதன் காலை **9.00 மணிக்கு** பல்கலைக்கழக சபை மண்டபத்தில் நடைபெறும்.

இவர்கள் அனைவருக்குமான கடிதங்கள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

**பதிவாளர்.** (C/18671)



## தரம் 6 அனுமதி
## ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை

விண்ணப்பங்களை அலுவலகத்தில் பெற்று, பூரணப்படுத்தி, கார்த்திகை 12ஆம் திகதிக்கு முன்னர் அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.

அதிபர்,
யா/ஹாட்லிக் கல்லூரி,
பருத்தித்துறை.

(C/18669)



### வல்லியானந்தம் ஆயில் நின்றொல்லை பிள்ளையார் ஆலய
## மகாசபைக் கூட்டம்

காலம்:- *நாளை (14.10.2001) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி*

இடம்:- *ஆலய மண்டபம்*

விடயம்:- *திருப்பணிச் சபையின் கணக்கறிக்கை சமர்ப்பித்தல்.*

மகாசபை அங்கத்தவர்களும், திருப்பணிக்கு உதவி வழங்கியோரும், வணக்ககாரரையும் இக்கூட்டத்துக்குத் தவறாது சமுகமளிக்குமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றேன்.

வல்லியானந்தம்,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி. (C/18668)

செயலாளர்,
**ஆலய திருப்பணிச் சபை.**



## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன்
செல்வன் செ.சிவகரன் அவர்களின்
அன்புத் தந்தையார்

## V.செல்வநாயகம்

அவர்கள் நேற்று (12-10-2001) இறைபதம் அடைந்தமையையிட்டு துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

விஞ்ஞானபீட 2ஆம் வருட
மாணவர்கள்

*யாழ்.பல்கலைக்கழகம்.* (93372)



## மரண அறிவித்தல்

## வேலாயுதம் செல்வநாயகம்

*(ஓய்வுபெற்ற கடற்படை உத்தியோகத்தர். வயாவிளான் தெற்கு, வயாவிளான்)*

மாவிட்டபுரம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வயாவிளானை வசிப்பிடமாகவும் கொண்ட, தற்பொழுது சுன்னாகம் - பண்டிதர் மாணிக்கத் தியாகராசா வீதியில் வசித்தவருமாகிய வேலாயுதம் செல்வநாயகம் நேற்று (12.10.2001) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் வேலாயுதம் - வள்ளியம்மை ஆகியோரின் பாசமிகு மகனும், ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும், சிவகரன் (விஞ்ஞான பீட 2ஆம் வருட மாணவன், யாழ்.பல்கலைக்கழகம்), சிவரூபி, சிவகுசாந்தி, பிரியதரிசா, சிவஜனோசன், துயந்தி (யூனியன் கல்லூரி, மருதனார்மடம்), சிவமரீனா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, இரத்தினலிங்கம், நவமணி, செல்வராணி மற்றும் செல்வராசா (ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற S.T.தர்மலிங்கம் மற்றும் K.சிவசுப்பிரமணியம் (புடைவைக் கைத்தொழில் மேற்பார்வையாளர்), சி.ஈஸ்வரலிங்கம் (இ.போ.ச.கணக்குப்பகுதி, வவுனியா), சி.அற்புதலிங்கம் (ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை), சி.அமுதலிங்கம் (ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர், வாழைச்சேனை), சி.நவரத்தினலிங்கம் (பனை அபிவிருத்திச்சங்கம், யாழ்ப்பாணம்), குலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2001) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் (புதியநேரம்) நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

*பண்டிதர் மாணிக்கத்தியாகராசா வீதி,*
*சுன்னாகம்.* (93385)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஒக்.13 மூளாய் புனித செபமாலை மாதா ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த புதன் கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை ஆராதனை இடம்பெறும். நாளை ஞாயிறு காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலி, திருச் சொரூபபவனி, சொரூப ஆசீர் என்பனவற்றுடன் விழா நிறைவுபெறும்.

(க)

★ ★ ★

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12மணி வரை நவக்கிரக ஹோமம் இடம்பெறும். (ஜ-17)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## பட்டமளிப்புவிழா புகைப்படங்கள்

06-10-2001 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களை மாணவர்கள் பின்வரும் தினங்களில் யாழ். பல்கலைக் கழக கல்விக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

| திகதி | நேரம் காலை 9.00—12.00 | நேரம் மாலை 2.00—4.00 |
|---|---|---|
| 15-10-2001 | கலைப்பீடம் | நுண்கலைத்துறை |
| 16-10-2001 | வர்த்தகத்துறை | முகாமைத்துறை |
| 17-10-2001 | விஞ்ஞானம்98/99 | விஞ்ஞானம்99/2000 |
| 18-10-2001 | மருத்துவம் | சித்தமருத்துவம் |
| 19-10-2001 | மின்பிடியியல் கற்கைநெறி உடற்கற்கைநெறி | கல்வியியல் பட்டப்பின் படிப்பு, பொது நிர்வாக பட்டப்பின் படிப்பு, முதுமெய்யியல்மாணி, முதுதத்துவமாணி மாணவர்கள் |

உதவிப்பதிவாளர்.

(சி/18666)

## நாடக விழா

நாடக விழாவும் கலைஞர் கௌரவிப்பும் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு மிந்திரன் அம்மன் ஆலய முன்றலில் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் அகில இலங்கை இளங்கோ கழகம் வழங்கும் 'பாஞ்சாலி சபதம்' நாடகம் மேடையேறவிருக்கின்றது. (ஐ-3)

## விளையாட்டு நிகழ்வு

யாழ். மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கம், பாடசாலைகளுக்கு இடையில் கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் நடத்தி வரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்ப்பாணக் கல்லூரியும், கொக்குவில் இந்துக் கல்லூரியும் மோதவிருக்கின்றன.

(ஐ-3)

## தவறவிட்ட பொருள்கள்

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் வருடாந்த மஹோற்சவ காலத்தின் போது பக்தர்களால் தவறவிடப்பட்ட பெண்கள் அணியும் கைக்கடிகாரம், மோட்டார் சைக்கிள் திறப்புக்கள், வீட்டுத்திறப்புக்கள், 7 சைக்கிள் திறப்புக்கள் போன்றவை பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு வல்லிபுரம் கிராம சேவையாளர் என். குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

(க-173)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 13 பச்சிலைப் பள்ளிப் பிரதேச செயலர் பிரிவில் செயற்படும் விளையாட்டுக்கழகங்களின் தலைவர், செயலாளர்களுக்கான கலந்துரையாடல் எதிர் வரும் 17 ஆம் திகதி புதன் கிழமை காலை 10 மணிக்கு புலோலியில் அமைந்துள்ள பச்சிலைப் பள்ளிப் பிரதேச செயலகப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் விளையாட்டுக் கழகங்களின் சீரமைப்புக் குறித்து முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட இருப்பதாகவும் —

எனவே சகல விளையாட்டுக்கழகங்களினதும் தலைவர், செயலாளர்களை இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறும் விளையாட்டு உத்தியோகத்தர் சி. ஜெயக்குமார் கேட்டுள்ளார்.

(ஐ-7)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக். 13 யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு திருநெல்வேலியில் உள்ள சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

(ஐ-5-7)

## கண் பரிசோதனை

யாழ்ப்பாணம், ஒக். 13 இணுவில் லயன்ஸ் கழகம் ஏற்பாடு செய்துள்ள இலவசக் கண் பரிசோதனை முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30மணி முதல் நண்பகல் 12 மணி வரை இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கண் பரிசோதனையை லயன் எஸ். எம். பெர்னாண்டோ நிறுவனத்தார் நடத்துவர்.

(ஐ-7)

## வாழ்த்துகின்றோம்

கிளி / தர்மக்கேணி அ. த. க. பாடசாலை மாணவன்

### செல்வன் தனபாலசிங்கம் தர்சிகன்

2001 – 5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 134 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்தமைக்காக அவருக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் கல்வி புகட்டிய அதிபர், ஆசிரியர்களுக்கும், பெற்றோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

திருமதி பத்மநாதன் குடும்பத்தினர்

பளை நகரம்.

(சி/18674)

# கேள்வி அறிவித்தல்

## அரசினர் பொது வைத்தியசாலை, யாழ்ப்பாணம்

## அழுக்குத் துணிகளைச் சலவை செய்தல் - 2002

2002 ஆம் ஆண்டில், யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலையில் அழுக்குத் துணிகளைச் சலவை செய்வதற்கான கேள்வி மனுக்கள் யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலை கேள்விச்சபைத் தலைவரினால் கோரப்படுகின்றன.

2. கீழே காட்டப்பட்டுள்ள சொத்துக்கள் பெறுமதிக்கு பொது 170 படிவத்தில் சான்றிதழையும் மீளளிக்கப்படாத கேள்வி வைப்புக் கட்டணம் ரூபா 300/- ஐ வைத்தியசாலை அலுவலகத்திில்செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பொது 172 படிவத்திலான பற்றுச்சீட்டையும் தமது தேசிய அடையாள அட்டையையும் சமர்ப்பித்து 2001-10-29 ஆம் திகதி பி. ப. 2.00 மணி வரை கேள்விப் பத்திரங்களை இவ் வைத்தியசாலை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

### யாழ்ப்பாணம், அரசினர் பொது வைத்தியசாலை-இலக்கம் 22

| பிரிவு | மாதாந்தம் சலவைசெய்ய வேண்டிய துணிகளின் சராசரி | மாதாந்தம் சலவைசெய்ய வேண்டிய தடவைகள் | சொத்துக்கள் சான்றிதழ்பெறுமதி ரூபா | செயலணிப் பிணை ரூபா |
|---|---|---|---|---|
| 1 | 10795 | 15 | 9,000/- | 2,000/- |
| 2 | 11345 | 04 | 12,000/- | 2,000/- |
| 3 | 16031 | 04 | 16,000/- | 3,000/- |
| 4 | 109122 | 15 | 43,000/- | 8,000/- |
| 5 | 5920 | 04 | 9,000/- | 2,000/- |
| 6 | 695 | 15 | 1,000/- | 200/- |
| 7 | 4684 | 10 | 6,000/- | 1,000/- |
| 8 | 1408 | 04 | 1,000/- | 300/- |

3 கேள்விப் படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறை மூத்திரை இடப்பட்டு, இடப்பக்க மேல் மூலையில் "2002 ஆம் ஆண்டில் அழுக்குத் துணிகளை சலவை செய்தல், யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலை" எனக் குறிப்பிட்டு 2001 - 10 - 30 ஆம் திகதி மு. ப. 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பு கிடைக்கக் கூடியதாகத் 'தலைவர், யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலைக் கேள்விச்சபை அரசினர் பொது வைத்தியசாலை, யாழ்ப்பாணம்' என்னும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பவேண்டும் அல்லது யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டிக்குள் இடப்படுதல்வேண்டும்.

4. கேள்வி மூடப்பட்ட அதே சந்தர்ப்பத்தில் திறக்கப்படும் என்பதுடன், கேள்வியாளருக்கு அல்லது அவரது அதிகாரம் பெற்றுக்கொண்டுள்ள பிரதிநிதி ஒருவருக்கு அச்சந்தர்ப்பத்தில் கலந்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்படும்.

5. கேள்வி மனுக்களுடன் ஏற்புடைய பெறுமதிக்குக் கேள்விப்பிணை அல்லது அப்பெறுமதிக்குச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் பெயருக்குப் பணம் வைப்பிலிடப்பட்டுப் பெற்றுக்கொண்ட பற்றுச்சிட்டின் மூலப்பிரதியுடன் பிராந்திய சுகாதாரசேவைப் பணிப்பாளர்/ சுகாதார வைத்திய உத்தியோகத்தரின் சான்றிதழ் ஒன்றும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

6. கேள்வி ஆவணங்களைக் கட்டணம் எதுவும் செலுத்தாது இவ் வைத்தியசாலை அலுவலகத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

7. அரசாங்கத்தின் ஒப்பந்த நிபந்தனைகளை மீறிக் குற்றக் குறியீடுகளைப் பதிவேடுகளில் இடப்பட்டவர்களுக்குக் கேள்விப்படிவங்கள் வழங்கப்படமாட்டாது.

8. மேலதிக விவரங்களுக்கு அலுவலக நேரத்தில் தொடர்புகொள்ளலாம்.

வைத்திய கலாநிதி (செல்வி) நவமலர் கனகரத்தினம்

பணிப்பாளர்

பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம். 11-10-2001.

(சி/18964)

## கண்ணீர் அஞ்சலி

வேலணை பிரதேச சபைத் தலைவர்
திரு ந. கருணாகரகுருமூர்த்தி ஜே.பி.யூ.எம்.
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி நமசிவாயம் மனோன்மணி

அவர்கள் காலமான செய்தியைக்கேட்டு கவலை அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அமரருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளையும் காணிக்கையாக்குவதுடன். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
வேலணை ப.நோ.கூ. சங்கம், வேலணை.

(93393)

## கண்ணீர் அஞ்சலி

வேலணை பிரதேச சபைத் தலைவர்
திரு. ந. கருணாகரகுருமூர்த்தி
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி ந. மனோன்மணி

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
அங்கத்தவர்கள்,
புங்குடுதீவு-நயினாதீவு ப. நோ. கூ. சங்கம்.

(சி/18684)

## கண்ணீர் அஞ்சலி

வேலணை பிரதேச சபையின் தவிசாளர்
உயர்திரு. ந. கருணாகரகுருமூர்த்தி
அவர்களது பாசமிகு தாயார்

### திருமதி நமசிவாயம் மனோன்மணி

அவர்கள் 11-10-2001 இல் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் பாதாரவிந்தத்தின்கீழ் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், உபதலைவர்,
உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள்.
ஊர்காவற்றுறை பிரதேச சபை

(சி/18635)

உதயன்

## இனவாதப் பிரசாரம் தெற்கில் ஒலிக்குமா?

பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டதும் அணி கட்டும் வேலை ஆரம்பமாகி விட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்க் காங்கிரஸ், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) ஆகியவற்றை ஒன்றிணைத்து ஓர் அணியில் வடக்கு - கிழக்கில் போட்டியிட முயற்சிகள் நடக்கின்றன. திருகோணமலை, அம்பாறை மற்றும் வன்னி மாவட்டங்களில் தமிழர்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்படுவதற்கு இது வழி செய்யும். கடந்த பொதுத்தேர்தலில் திருகோணமலையில் கிடைத்த கசப்பான அனுபவத்திலிருந்து படித்த பாடம், தமிழ்க் கட்சிகளை ஓரணியில் இணைய வழிசெய்யக்கூடும்.

எனினும் ஆட்சியில் இருக்கும் சிங்களப் பெரும்பான்மைக் கட்சிக்குச் சாமரம் வீசி, அதற்கு நன்றிக் கடனாக 'எலும்புத்துண்டைப்' பெறுவதே ஒரே கொள்கை என்ற அடிப்படையில் செயற்படும் கட்சிகள் இந்த அணியில் சேரமாட்டா அல்லது சேர்க்கப்படமாட்டா என்று எதிர்பார்க்கலாம்.

இதேசமயம் -

மலையகத்தில் பிரதான இரண்டு கட்சிகளான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் மலையக மக்கள் முன்னணியும் ஓரணியில் இணைந்து போட்டியிடுவதற்கான ஆயத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றன.

தேசிய மட்டத்திலும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசைப் பதவியிறக்க ஒன்றுபட்ட கட்சிகள், குழுக்கள் அனைத்தும் ஒன்றிணைந்து ஓரணியில் தேர்தலை எதிர்கொள்ளத் தயாராகி வருகின்றன.

தமிழ்க் கட்சிகள், மலையகக் கட்சிகள், முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஏனைய பெரும்பான்மை தமிழ்க் கட்சிகள் ஆகியவை அனைத்தையும் சேர்த்துப் புரிந்துணர்வு உடன்பாடொன்றைச் செய்து கொண்டு இக்கட்சிகளின் தனித்துவம் பாதிக்கப்படாதவிதத்தில் பொது வேலைத்திட்டம் ஒன்றின் அடிப்படையில் தேர்தலை எதிர்கொள்ள ஐ.தே.கட்சி தயாராகின்றது.

அத்தோடு -

தமது கட்சி ஆட்சிக்கு வந்தால் நாட்டின் தேசியப் பிரச்சினையான இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காகப் புலிகளுடன் பேச்சு நடத்தப்படும் என்றும் தமிழ் மக்களுக்குக் கூடிய அதிகாரத்தைக் கையளிப்பதன் மூலம் வடக்கு, கிழக்கில் தொடரும் யுத்தத்துக்கு முடிவு கட்டப்படும் என்றும் யுத்தத்தை நிறுத்துவதே முதற்பணி என்றும் ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருக்கின்றார்.

புலிகளுடன் பேச்சு, யுத்தநிறுத்தம், தமிழர்களுடன் அதிகாரப் பகிர்வு என்றெல்லாம் ரணில் அறிவித்திருப்பதும் -

தமிழ், முஸ்லிம், மலையகக் கட்சிகளுடன் ஓரணியில் இணைந்து போட்டியிட ஐ.தே.கட்சி தயாராகி வருவதும் -

தென்னிலங்கையில் மறுதரப்பில் இனவாதப் போக்கையும் பிரசாரத்தையும் நிச்சயம் கிளறிவிடும் என எதிர்பார்க்கலாம்.

சிங்களத் தீவிரவாதப் போக்குடைய சிஹல உறுமய, ஜே.வி.பி., பூமிபுத்ர கட்சி போன்றவை மட்டுமல்லாமல் அதிருப்திக் குழு என்ற பெயரில் பல முக்கியஸ்தர்களை இழந்து 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான' நிலையில் இருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் அதனோடு சேர்ந்த அணியும் கூட, தேர்தல் வெற்றிக்காக - வாக்கு வசீகரத்துக்காக - இனவாதப் பிரசாரப் பாதையை நாடக்கூடும்.

1994ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல் காலத்தில் அப்போது ஐ.தே.கட்சித் தலைவராக இருந்த ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கவும் அவரது சகாக்களும் "சிங்களவர் என்ற விருட்சத்தில் தாங்கி நின்று சுற்றி வளரும் கொடிகளே தமிழர்" என்ற சாரப்பட இனவாதக் கருத்துக்களை உமிழ்ந்ததும் "அதிகாரப் பகிர்வின்மூலம் தமிழர்களுக்கு அதிக உரிமையளித்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்போம்" என்று பிரசாரத்தை முன்வைத்து சந்திரிகா குமாரதுங்க பெரு வெற்றியீட்டியதும் தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கு நல்லபாடங்கள்.

இந்தப் பாடத்தைப் படித்துக் கொண்டு தெற்கு அரசியல்வாதிகள் திருந்துவார்களா அல்லது மீண்டும் இம்முறையும் இனவாத அரசியலை நாடுவார்களா என்பது தேர்தல் பிரசாரம் சூடுபிடிக்கத் தொடங்கத் தெரியவரும்.

எது எப்படியென்றாலும் தமிழர் பிரச்சினைக்கும் - இனச் சிக்கலுக்கும் - அமைதித் தீர்வு காண்பதே தனது ஒரே பணி என்ற கோஷத்தோடு ஆட்சி அதிகாரத்துக்கு வந்து கடந்த ஏழு ஆண்டுகளாக அந்த வழியில் ஆக்கபூர்வமான ஒரு சிறிய நகர்வைக்கூட மேற்கொள்ளாமல் தனது ஆட்சி அதிகாரத்தைத் தொடர்ந்து தக்கவைப்பதற்காக யுத்தத்தைத் தீவிரப்படுத்தி இன முரண்பாட்டை இன்னும் மோசமடையச் செய்துவிட்டு, மீண்டும் தமது அணி ஆட்சிப்பீடத்துக்கு ஏற மக்களின் அனுமதியைக் கோரும் ஜனாதிபதிக்கும் அவரது முன்னணிக்கும் சரியான பாடத்தைப் போதிக்க வேண்டிய பொறுப்பு தங்களுக்குக் காத்திருக்கின்றது என்பதைத் தமிழ் மக்கள் உணர்ந்துகொள்ளவேண்டும்.

# இரண்டாவது வாரமாக... படம் பார், பாடம் படி!


அக்காலப் படங்களில் நல்ல கதை இருக்கும். சிறந்த கருத்துக்கள் இருக்கும். பண்பட்ட நகைச்சுவைக் காட்சிகள் இருக்கும். இலக்கியத் தரமான பாடல்கள் இருக்கும்.... இப்படியொரு கருத்து இருக்கிறது.... மொத்தத்தில் அப்படங்களில் இருந்து நாம் பலதையும் கற்றுக்கொள்ள முடியும்....

படம் வெளிவருகின்ற போது கூடவே எட்டுப் பக்கத்தில் ஒரு பாட்டுப் புத்தகமும், திரைக்கதை - வசனம் - பாடல்கள் என்று இன்னொரு புத்தகமும் வெளிவரும். அவைகள் கூட சிலசமயம் நல்ல கவிதை, நாடக நூல்களாக அமைந்துவிடும். குறிப்பாக பாட்டுப் புத்தகத்திலே கதைச் சுருக்கம் தந்து, "மிகுதியை 'வெள்ளித் திரை'யில் காண்க" என முடித்திருப்பார்கள். அது கூட குறித்த படத்துக்கான ஒரு சிறந்த அறிமுகம் - வழிகாட்டிதான்....

அதிகம் ஏன், படங்கள் பார்த்த அருட்டுணர்வைக்கொண்டு நாடகங்கள் தயாரித்தவர்களும், படவசனங்களைப் பேசியும் நடிப்பைப் பின்பற்றியும் நடிகர்களானவர்களும் கூட இருந்திருக்கிறார்கள். படத்தை விடுங்கள், படத்திற்குள் - கதைக்குள் கதையாக வந்த சோக்கிரட்டீஸ், சாம்ராட் அசோகன் போன்ற குறுநாடகங்களைத் தாங்களும் நடித்தே புகழ் பெற்றவர்களும் உண்டு. காலஞ்சென்ற நடிகர் மா.அருமைநாயகம் கூட ஆரம்பகாலங்களில் சோக்கிரட்டீஸ் நாடகத்தை நடித்துப் பின்னர் அது வெற்றிவிழாக் கூடக் கண்டது. கலைஞர் மு.கருணாநிதியின் வசனங்களை - அவர் போலவே பேசி மக்களின் 'அப்ளாஸ்'களைப் பெற்று 'ஈழத்துக் கருணாநிதி'கள் உருவான காலமும் அதுவே!

இக்காலத்திலே தயாரிக்கப்படுகின்ற அத்தனை ஜனரஞ்சகமான - மசாலா படங்களையும் பார்க்கின்றவர்கள் பெற்றிராத 'பாடங்களை' அக்காலத்தில் ஆடிக்கொன்று ஆவணிக்கொன்று என்று பார்த்த நாம் பெற்றிருக்கின்றோம். பரீட்சையில் தமிழ் பாடம் நன்றாகச் செய்திராத ஒருவரைப் பார்த்து 'ஒழுங்காகப் படம் பார்த்துமா அப்படி?' என்று கேட்பதுண்டு என்றால் நான் 'படம் பார் பாடம் படி' என்று சொல்ல வந்ததில் என்ன தவறைக் கண்டு விட்டீர்கள்?

புதிய படங்களைத் திரையிடும் வாய்ப்பு நகரங்களில் உள்ள திரையரங்குகளுக்குத்தான் கிடைக்கும் என்றும், அவை சங்கானை, இணுவில், நெல்லியடி




போன்ற திரையரங்குகளுக்கு வரும் போது அவை 'பழசாகி'விடும். என்பதையும் ஏற்கனவே சொல்லியிருந்தேன். அதேபோல நகரத்தில் உள்ள இரண்டு திரையரங்குகளில் ஒரு படம் ஓடிய அதிசயம் பற்றியும் சென்றவாரம் சொல்லியிருந்தேன். இன்றைக்கு ஒரு படத்துக்கு மூன்று இடைவேளை விட்ட ஒரு திரையரங்கு பற்றிச் சொல்லப் போகின்றேன். நாங்கள் அப்போது பொறுமையாக இருந்து அப்படிப் படம் பார்த்த கதையை நீங்களும் பொறுத்திருந்து கேட்கவேண்டும் எனக் கேட்டுகொள்(ல்)கிறேன்.

இணுவில் ஸ்ரீகாலிங்கன் திரையரங்கில் ஒரேயொரு படம் காட்டும் கருவிதான் (புறஜெக்டர்) இருந்தது. (இத்திரையரங்கு நான் முன்னர் குறிப்பிட்ட மருதனார்மடம் நன்னாரித் தேத்தண்ணிக் கடையில் இருந்து 'ஒரு கூப்பிடு' தூரத்தில் இருந்தது) ஒருபடம் பன்னிரண்டு சுருள்களைக் கொண்ட தொகுதி என்றால் ஒரு புறஜெக்டரை வைத்துக் கொண்டு எப்படி அதைக் காட்டமுடியும்? எனவே, அவர்கள் மூன்று சுருள்களை ஒரு பென்னம்பெரிய சுருள் என்ற அடிப்படையில் அனைத்துச் சுருள்களையும் நான்கு சுருள்களாக இணைத்து வைத்திருப்பார்கள். அந்த வண்டிச் சில்லுப் போன்ற பாரிய படச்சுருளை புறஜெக்டரில் இருந்து கழற்றிப் பொருத்தி படம் காட்டுவதனால்தான் அப்படி மூன்று இடைவேளைகள்.... புறஜெக்டர் 'முக்கிமுக்கி' படச்சுருளை இழுக்கும் போது சுருள் அறுந்துவிட்டால், மேலும் சில இடைவேளைகள்.... அப்போதெல்லாம் சினிமா விசிறிகளின் 'விசிலடி' காதுகளைப் பிளக்கும்....

பொறுமைக்கும் ஓர் எல்லை வேண்டாமா? அப்படியெல்லாம் சகித்துக் கொண்டு எதற்காகப் படம் பார்க்கவேண்டும்? அப்படித்தானே கேட்கிறீர்கள்? அதற்கும் காரணம் உண்டு.

இப்பொழுதெல்லாம் அந்தக் காலத்துப் படங்களைப் பற்றி பெருமைப்படுகிறோம். அதேபோல, அப்பொழுதும் அதற்கு முந்திய காலத்து சில படங்களைப் பற்றி பெருமை பேசப்படுவதுண்டு. அவைகளைப் பார்ப்பதற்குரிய இடம் என்றால் இந்தப் பழைய படங்கள் ஓடுகின்ற திரையரங்குகள் தானே நமக்குக் கதி! குறிப்பாக சுந்தராம்பாள் நடித்த ஒளவையார், கண்ணாம்பா நடித்த கண்ணகி, எஸ்.வி. சுப்பையா நடித்த வள்ளியின் செல்வன் போன்ற படங்களை நாங்கள் பார்த்தது இந்த மூன்று இன்ரவேல் புகழ் திரையரங்கில் தான் என்பது நினைவு....

இறுதியாக இன்னொரு விடயம் சொல்லவேண்டும். அக்காலக் கல்விமான்கள் சொல்லுவார்கள் 'நாவலர் சந்தி' என்றால் தெரியாதவர்கள் இருக்கலாம். ஆனால் மனோகராச் சந்தி என்றால் தெரியாதவர்கள் இருக்கமுடியாது. (முன்னருள்ள பெயருக்குப் பின்னால் ஒரு தமிழறிஞர் இருக்கிறார். பின்னருள்ள பெயருக்குப் பின்னால் ஒரு சினிமா மடுவம் இருக்கிறது) இப்பொழுது மட்டும் என்னவாம்? நாவலர் பாடசாலை இன்னமும் பக்கத்திலே இருக்கிறது. பட மடுவம் களஞ்சியமாக மாறிவிட்ட போதிலும்.....

*- சண் அங்கிள்*

### யாழ்.பொலீஸ் நிலையத்தில் நடைபெறும்

# காணாமற்போனோர் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.13

காணாமாற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக யாழ்.பொலீஸ் நிலையத்துக்கு வருகை தந்துள்ள குற்றப் புலனாய்வுப் குழுவினருக்கு பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு அந்தக் குழுவுக்குத் தலைமை வகித்து வந்துள்ள பொலீஸ் அத்தியட்சகர் சி.டி.லியனகே கேட்டுள்ளார்.

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக அழைக்கப்படும் சாட்சிகள், முறைப்பாட்டாளர்கள் மற்றும் கிராம அலுவலர்கள் போன்றோர் தேவையற்ற அச்சம் காரணமாக பொலீஸ் நிலையத்துக்கு வருகைதருவதில்லை எனத் தெரிகிறது. இதனால் விசாரணைகளைத் தொடர்து முன்னெடுத்துச் செல்ல இயலாத ஏது நிலை தோன்றியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை மொழிபெயர்ப்பாளர்கள் இல்லாமையினால் பொது மக்கள் விசாரணையின் போது பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்குவதாகக் கூறப்படுகிறது.

(க-9)

### நாளை

புரட்டாதி 28
ஞாயிற்றுக்கிழமை
திதி :துவாதசி
முற்பகல் 8.30 வரை
நட்சத்திரம் : பூரம்
மாலை 6.43 வரை
பிரதோஷ விரதம்
சுபநேரம் : 9.02 - 10.32
ராகுகாலம் : 4.32 - 6.02
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

ஓயாது பேசிக்கொண்டிருப்பவன் உள்ளத்தில் ஒன்றுமே தங்காது; ஒன்றுமே பேசாதிருப்பவன் உள்ளத்தில் உண்மை தங்காது.

## நாட்டு நடப்பு

**காதலிலும் கவனம் வேண்டும்**

வானதி முதுமாணி ஆனாள்
வசந்தனை ஏமாற்றி விட்டாள்
போனால் வெளிநாடு போவேன்
பொறுத்திரேன் இங்கே என்றாள்
'கானா'வால் வந்த காளை
கரிகாலனை கைப் பிடித்தாள்
போனார்கள் தேன்நிலவு தேடி
பொல்லாத காய்ச்சல் காண
ஏனத்தான் என்று கேட்டு
ஏந்திளை கலங்கிப் போனாள்
கானாவில் கானும் எய்ட்ஸ்
கடிதினில் கொல்லுமென்றார்.

*- விகடகவி.*

### மந்திகை ஆஸ்பத்திரிக்கு

# 2 வருடங்களுக்கு முன்னர் கிடைத்த 'எக்ஸ்-றே' இயந்திரம் பொருத்தப்பட்டது

யாழ்ப்பாணம்,ஒக்.13

மந்திகை ஆஸ்பத்திரிக்குக் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் அனுப்பி வைக்கப்பட்ட 'எக்ஸ்-றே' இயந்திரம் கடந்த செவ்வாய்க்கிழமை பொருத்தப்பட்டது.

இத்துடன் இந்த ஆஸ்பத்திரியில் மூன்று 'எக்ஸ்-றே' இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கு வழங்கப்பட்ட 'எக்ஸ்-றே' இயந்திரம் மீண்டும் உறங்கல் நிலையிலேயே உள்ளது.

தெல்லிப்பழை ஆஸ்பத்திரி சொந்தக் கட்டடத்தில் இயங்காது அங்குள்ள தனியார் கூட்டுறவு வைத்திய சாலைக் கட்டடத்தில் இயங்கி வருவதாலும், இந்த இயந்திரத்தை இயக்க போதிய வசதியின்மையினாலுமே இது பொருத்தப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இதனை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும் மட்டுப்படுத்தப்பட்ட சில 'எக்ஸ்-றே' படங்களை மாத்திரமே இதில் எடுக்க முடியும் என்ற காரணத்தால் அங்கே பொருத்துவதும் இறுதி நேரத்தில் கைவிடப்பட்டது.

தெல்லிப்பழை ஆஸ்பத்திரி அதற்குரிய கட்டடத்தில் இயங்க ஆரம்பிக்கும் வரை இந்த 'எக்ஸ்-றே' இயந்திரம் மூலையில் கிடக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

(க-15)

## 9 பேருக்கு நிரந்தர நியமனம்

வலி.கிழக்கு,ஒக்.13

நல்லூர் பிரதேச சபையில் சமயா சமய ஊழியர்களாகக் கடமையாற்றி வந்தவர்களில் 9 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

சுகாதாரத் தொழிலாளி, காவலாளி, வேலைத் தொழிலாளி ஆகிய தொழிலாளர்களில் 9 பேருக்கு நிரந்தர நியமனம் கடந்த முதலாம் திகதி முதல் வழங்கப்பட்டுள்ளது. (க-180)

### நீர் இறைக்கும் இயந்திரங்களைப் பெற்று

# பணத்தை திருப்பிச் செலுத்தாத விவசாயிகள் மீது சட்டநடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.13

கடந்த 1999ஆம், 2000ஆம் ஆண்டுகளில் சீடா திட்டத்தின் கீழ் சுழற்சி முறையில் நீரிறைக்கும் இயந்திரத்தைப் பெற்றுக்கொண்ட விவசாயிகளில் இதுவரை அதற்குரிய பணத்தைச் செலுத்தாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள கமநல கேந்திர நிலையங்கள் ஊடாக வழங்கப்பட்ட நீரிறைக்கும் இயந்திரங்களுக்கான பணத்தை அநேக விவசாயிகள் செலுத்திய போதிலும் புத்தூர் கமநல கேந்திர நிலையத்தின் ஊடாகப் பெற்றுக்கொண்ட 22 விவசாயிகள் இதுவரைப் பணத்தைச் செலுத்தவில்லை.

ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபா இதனால் முடக்கப்பட்டுள்ளது. ஆகவே குறிப்பிட்ட விவசாயிகள் மீது விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் கே.சுந்தரேசன் அறிவித்துள்ளார்.

இதேவேளை -

உடுவில் கமநல கேந்திர நிலையத்தின் ஊடாகப் பெற்றுக்கொண்ட ஓரிரு விவசாயிகள் மீதும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(க-10-ரி)

## வடமராட்சியில் தொழில்நுட்பப் பூங்கா கிளை

யாழ். தகவல் தொழில்நுட்பப் பூங்காவின் கிளை விரைவில் வடமராட்சிப் பகுதியில் நிறுவப்படவுள்ளது.

பூங்கா ஆரம்பிப்பதற்கான கணனி இயந்திரங்கள் வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையினால் கொண்டுவரப்பட்டுள்ளதாகச் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

(க-117)




## பாராட்டி வாழ்த்துகிறோம்



200ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 135 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த
யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை மாணவி
**செல்வி தவராசா ருஷானியை**
பாராட்டுவதுடன், அவருக்கு கல்வி புகட்டிய அதிபர், ஆசிரியர், வகுப்பாசிரியர் மற்றும் தனியார் கல்வி நிறுவன ஆசிரியர் சகலருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இவர் மேன்மேலும் கல்வியில் சிறந்துவிளங்க எல்லாம்வல்ல வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாளை வேண்டி நிற்கிறோம்.

இவரைப் பாராட்டுபவர்கள்:
அம்மா, அப்பா, சகோதரங்கள்,
அப்பம்மா, அம்மம்மாக்கள், தாத்தாமார்,
பெரியப்பாமார், பெரியம்மாமார்,
சித்தப்பாமார், சித்திமார், மாமாமார்,
மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார்.

*146,சிவப்பிரகாசம் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(93360)

## 2ஆம் வருட நினைவஞ்சலி



| தர்மத்தின் மடியில் | அதர்மத்தின் பிடியில் |
|---|---|
| 12 - 02 - 1948 | 05 - 10 - 1999 |

**அமரர் வேலாயுதபிள்ளை அருணந்தி**
(செயலாளர் - சாவகச்சேரிப் பிரதேச சபை)
திதி:-13.10.2001

*நன்றுடையானை தீயதில்லானை*
*அன்புக்கினியானை – எங்கள் குல விளக்கை*
*என்றும் நெஞ்சிருத்தி வணங்குவோம்.*
*அதர்மத்தை வெல்லும் மறுதர்மம்*
*இது நியதி –*

அம்பாள் இணையடியில் இன்புற்றிருக்க எஞ்ஞான்றும்
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*சங்கத்தானை,*
*சாவகச்சேரி.*
(93311) - குடும்பத்தினர்.

### காரைநகரில் 65 மாணவருக்கு கல்வி உபகரணங்கள்

காரைநகர்,ஒக்.13

காரைநகர் பாடசாலைகளில் தரம் 4, 5இல் கல்வி பயிலும் 65 மாணவர்களுக்கு, காரைநகர் கடற்படையினரால் கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. காரைநகர் 'எலாரா' கடற்படைத் தளம் அமைக்கப்பட்டு 50 ஆண்டு நிறைவை ஒட்டி, கடந்த திங்கட்கிழமை காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகளை நடத்திய கடற்படையினர் அங்கு பாடசாலை மாணவர்களை அழைத்துவந்து உபகரணங்களை வழங்கினர். இவற்றைக் காரைநகர் கடற்படைத் தளபதி அசல பெர்னாண்டோ வழங்கினார். (க-73)

### சைவ சமய பரீட்சை

காரைநகர் மணிவாசகர் சபையினால் வருடாந்தம் நடத்தப்படும் சைவ சமயபாடப் பரீட்சைக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் காரைநகர் பாடசாலை மாணவர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன. இப்பரீட்சை அடுத்த மாதம் நடத்தப்படவுள்ளது. (க-73)

### கூட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.13

வடமராட்சி தொலைபேசி உரிமையாளர் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் இன்று மாலை 4 மணிக்கு நெல்லியடி "சதா பொன்ஸ்" கல்வி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது. மோட்ரோலா தொலைபேசிப் பாவனையாளர்களின் பிரச்சினை சம்பந்தமாக ஆராயவிருப்பதால் அங்கத்தவர்கள் அனைவரையும் சமுகம் தரும்படி சங்கச் செயலாளர் கேட்டுள்ளார்.(கரி)

### நிவாரண முத்திரை

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் முத்திரை இன்மையால் பட்டியல் மூலம் நிவாரணம் வழங்கப்பட்டவர்களுக்குத தற்போது நிவாரண முத்திரைகள் கிராம அலுவலர்களினால் வழங்கப்படுகின்றன.

கடந்த மாதம் ஓர் அங்கத்தவர், இரண்டு அங்கத்தவர்களுக்கான முத்திரை பற்றாக்குறையினால் இவர்களுக்கான நிவாரணம் பட்டியல் மூலம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.




மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தினரால் நவாலி சென்.பீற்றர்ஸ் பாடசாலையில் நடத்தப்பட்ட இலவச வைத்திய முகாம் ஒன்றின்போது, யாழ்.போதனா வைத்தியசாலை கண் சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ்.குகதாசன், நோயாளி ஒருவருடைய கண்ணைப் பரிசோதனை செய்வதைப் படத்தில் காணலாம். லயன்ஸ் கழக சேவைத் திட்ட அதிகாரி லயன் எஸ்.எஸ்.தங்கராஜா அருகில் காணப்படுகிறார்.
(படம்: *வலிகாமம் தெற்கு செய்தியாளர்*)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18 ☆ 12 ☆ 1942 | 24 ☆ 09 ☆ 2000 |

**அமரர் நாகலிங்கம் துரைராஜா**
திதி:-13.10.2001

அல்லலின்றி அன்பாய் உணவளித்து - "இனி
அருகிருப்பேன் கல்வி புகட்டிடவே"
எனப் பகர்ந்ததும் உணர்ந்திங்கு - நாம்
எந்தையின் பிரிவுப் பன்னிரு திங்களோடினும்
என்றும் ஏக்கத் தவிப்புடன் வாழும்....

*நெட்டிலிப்பாய்,*
*கோண்டாவில்.*
குடும்பத்தினர். (93309)


# மக்கள் வங்கியின் மகளிர் அதிர்ஷ்டக் கணக்கு

# வனிதா வாசனா - 2001

- ரூபா 2,670,000/- பெறுமதியான மாபெரும் பரிசுக் குவியலை மகளிருக்கென்றே அள்ளித் தருகின்றது.
- 01.11.2001 - 31.01.2002 வரை ரூபா 7,500/- அல்லது அதற்கு மேல் மீதியுள்ள மகளிர் அதிர்ஷ்டக் கணக்குகள் அனைத்தும் பரிசுச் சீட்டிழுப்பில் சேர்த்துக்கொள்ளப்படும்.

☆ரூபா 7,500/- இற்கும் மேற்பட்ட ஒவ்வொரு 7,500/- இற்கும் சந்தர்ப்பம் கிடைக்கும்.

- 12 மாதங்களுக்கு மேல் தொடர்ச்சியாக ரூபா 25,000/- அல்லது அதற்கு மேல் மீதியைப் பேணும் மகளிர் அதிர்ஷ்டக் கணக்கு வைத்திருப்போருக்கு ரூபா 300,000/- பெறுமதியான காப்புறுதி வசதி கிடைக்கும்.
- இக்கணக்கை ஒரு சேமிப்புக் கணக்குப் போன்று நடைமுறைப்படுத்தலாம்.
- கணக்கிலுள்ள மீதிக்கு வட்டி வழங்கப்படும்.

☆விசேட கடன் திட்டம் இதற்கென அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

முதலாம் பரிசு:- ரூபா 750,000/- பெறுமதியான மாருதி கார்.
24பரிசில்கள் :- ரூபா 32,000/- பெறுமதியான குளிர்சாதனப் பெட்டிகள்.
24பரிசில்கள் :- ரூபா 18,000/- பெறுமதியான மைக்கிரோ வேவ் ஓவன்கள்
240பரிசில்கள் :- ரூபா 7,000/- பெறுமதியான தங்க நாணயங்கள்

பெண்களே! உங்கள் பெயரில் ஏற்கனவே மகளிர் அதிர்ஷ்டக் கணக்கு இருக்குமாயின் அதன் மீதி ஏற்றதாக உள்ளதா எனக் கவனித்து ஏற்ற தொகையைச் சேமியுங்கள். இல்லாவிடில் அருகிலுள்ள மக்கள் வங்கிக் கிளையில் வனிதா வாசனா கணக்கொன்றை ஆரம்பியுங்கள்.

## மக்கள் மனமறிந்த வங்கி

## மக்கள் வங்கி

(C-18628)

### நெல்லியடி சந்தைக் குத்தகைக்காரர் கொலை:

# மூன்றாவது சந்தேக நபருக்கும் நீதிமன்றம் பிணை அனுமதி

வடமராட்சி,ஒக்.13

நெல்லியடி சந்தைக் குத்தகைக்காரர் கொலைச் சம்பவம் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மூன்றாவது சந்தேகநபர் யாழ்.மேல் நீதிமன்றத்தினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 25ஆம் திகதி கரவெட்டி மத்தியில் வைத்து சந்தைக் குத்தகைக்காரரான க.தவராசா (40 வயது) துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக நான்கு சந்தேக நபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் மூன்றாவது சந்தேக நபரான செ.சுந்தரமூர்த்தியை 20 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும், 75 ஆயிரம் ரூபா ஆள் பிணையிலும் செல்ல யாழ்.மேல் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இதனையடுத்து இவர் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு பிணை அனுமதி வழங்கப்பட்டது.

முதலாவது சந்தேக நபரான அ.சுதாகரன், இரண்டாவது சந்தேக நபரான சி.பாலசுப்பிரமணியம் ஆகியோர் தலா 25 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், நான்காவது சந்தேக நபரான நா.அகிலன் 15 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் செல்ல ஏற்கனவே அனுமதிக்கப்பட்டிருந்தனர். (க-173)

## வீதிப் புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு செய்யக் கோரிக்கை

வடமராட்சி,ஒக்.13

பழுதடைந்துள்ள பருத்தித்துறை கடற்கரை வீதியை அடுத்த ஆண்டு திருத்தி அமைக்க 20 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்து வழங்குமாறு பருத்தித்துறை நகரசபை வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரைக் கேட்டுள்ளது. (க-173)

## மதுபோதையில் வீதியில் கிடந்த பிக்கு!

கண்டி,ஒக்.13

மதுபோதையில் வீதியில் காவி உடையுடன் வீழ்ந்திருந்த பௌத்த பிக்கு ஒருவரை ஊரவர்கள் காவி உடையைக் கழற்றி சாரத்தை அணிவித்துப் பொலீஸாரிடம் ஒப்படைத்த சம்பவமொன்று மாவத்தகமவில் இடம்பெற்றுள்ளது.

மாவத்தகம பகுதியிலுள்ள விகாரை ஒன்றைச் சேர்ந்த பௌத்த பிக்குவே இப்படி மதுவெறியில் தெருவில் வீழ்ந்து கிடந்தார்.

மதுவில் பிரியம் கொண்ட இவர் சம்பவதினம் அதிகம் அருந்தியதன் காரணமாகச் சுய நினைவை இழந்தார்.

ஊர் மக்கள் உதவச் சென்ற போது பிக்கு அவர்களைத் தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளார். அதைத் தொடர்ந்து பௌத்த துறவியாக இருக்க இவர் அருகதையில்லை என்பதால் தாங்கள் காவி உடையை அகற்றி சாரத்தை அணிவித்துப் பொலீஸாரிடம் ஒப்படைத்ததாக ஊர் மக்கள் தெரிவித்தனர். (க)

## பல்கலை பேரவை உறுப்பினராக நியமனம்

வடமராட்சி,ஒக்.13

யாழ்.பல்கலைக்கழக பேரவை உறுப்பினராக வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையின் நிதிப் பணிப்பாளர் இ.அன்னலிங்கம் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக் குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பேரவையில் அங்கம் வகித்த பட்டயக் கணக்காளர் அ.சோமசுந்தரம் பிள்ளை இளைப்பாறியதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார். (க-173)

## மரக்கறி, மீன் சந்தைகள் குத்தகைக்கு!

வடமராட்சி,ஒக்.13

பருத்தித்துறை நகர சபையின் மரக்கறிச் சந்தை, மீன் சந்தை, சைக்கிள் பாதுகாப்பு நிலையங்கள் என்பன அடுத்த ஆண்டு முதல் குத்தகைக்கு வழங்கப்படவுள்ளன.

இதுவரைகாலமும் இவற்றைப் பருத்தித்துறை நகர சபை நேரடியாக நிர்வகித்து வந்தது.

குத்தகைக்கு இவற்றை வழங்க தற்போது கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன. (க-173)

### இத்தாலியில் தடுத்துவைக்கப்பட்டிருந்த

# மேலும் 88 இலங்கையர் நாடு கடத்தப்பட்டனர்

இத்தாலியில் இருந்து மேலும் 88 இலங்கையர்கள் நாடு கடத்தப்பட்டனர். புதன்கிழமை காலை இத்தாலிய விமானம் மூலம் கட்டுநாயக்கா விமான நிலையத்தை இவர்கள் வந்தடைந்தனர்.

விமான நிலையத்தில் வைத்து இரகசியப் பொலீஸார் இவர்களைக் கைது செய்து விசாரணைக்காகக் கூட்டிச் சென்றனர்.

இத்தாலிக்குள் சட்டவிரோதமான முறையில் புகுந்ததால் இவர்கள் அங்கு தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் அதிகமானவர்கள் பெரும்பான்மை இனத்தவர்கள் என்று கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவர்கள் படகுகள் மூலம் சட்ட விரோதமான முறையில் நாட்டை விட்டு வெளியேறியவர்கள் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இதேவேளை மேலும் ஆயிரக் கணக்கான இலங்கையர்கள் சட்ட விரோதமான முறையில் இத்தாலிக்குள் சென்றதால் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்றும் இவர்களும் கட்டம் கட்டமாக அங்கிருந்து அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றும் கொழும்பிலுள்ள இத்தாலிய தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார். (க)

# திஸநாயக்காவின் சொத்து குறித்து விசாரணை நடத்த உத்தரவு

முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்காவின் சொத்துக்கள் தொடர்பாக உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு லஞ்ச ஊழல் திணைக்களத்துக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

கண்டி ஹங்குரன்கெத்தவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட எஸ்.பி.திஸநாயக்காவின் வீடு தொடர்பாகவும், செலவுகள் எவ்வாறு செய்யப்பட்டன என்பது தொடர்பாகவும் வாகனங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் தொடர்பாகவும் உடனடி விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

மேலும் சமுர்த்தி நிதிக் கையாடல், மோசடிகள் விடயம் தொடர்பாகவும் துரித விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி பணித்துள்ளார். (க)

## உலக உளநல நாள் - ஒக்ரோபர் 10

### 2001ஆம் ஆண்டின் கருப்பொருள்

### ‘வேலைப்பளுவும் உளநலனும்’

நடைமுறைப்படுத்தப்படக்கூடிய செயற்திட்டங்களே வேலைத் தளத்தில் வைக்கப்படவேண்டும்.

# ஜீ.சீ.ஈ. (சா/தர) பரீட்சை தாமதமாகவே நடக்கும்

## டிசெம்பர் 11இல் ஆரம்பம்

கொழும்பு,ஒக்.13

ஜீ.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை சற்றுத் தாமதமாகவே ஆரம்பமாகும் என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் டிசெம்பர் 3ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த இப்பரீசை டிசெம்பர் 11ஆம் திகதியே ஆரம்பமாகுமென பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

டிசெம்பர் 3ஆம் திகதி ஜீ.சீ.ஈ. சாதரணதரப் பரீட்சையை ஆரம்பிப்பதற்கான சகல ஏற்பாடுகளையும் பரீட்சைத் திணைக்களம் செய்து முடித்துள்ள போதிலும், எதிர்வரும் டிசெம்பர் 5ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை முன்னிட்டு பரீட்சை தாமதமடையும் எனத் தெரிவிக்கப்பட்டது. (க-ரி)

# குடாநாட்டில் பரதக் கலைக்கு மறுமலர்ச்சி

"குடாநாட்டில் பரத நாட்டியக் கலை வளர்ச்சியில் மீண்டும் மறுமலர்ச்சி ஏற்பட்டிருப்பது தெரிகிறது. அண்மைக் காலமாக யாழ்.மண்ணில் பரதநாட்டிய அரங்கேற்றங்கள் இடம்பெற்று வருகின்றன. இந்த முயற்சிகள் வரவேற்கத்தக்கன.

"நாட்டியத் தாரகை ஒருத்தி இன்று எம்மத்தியில் உதயமாகியிருக்கிறாள். இந்தத் தாரகை ஈழத்திரு நாட்டுக்கும் - கலையுலகுக்கும் சிறந்த ஒளியைக் கொடுக்கும் என்பது எனது அசையாத நம்பிக்கை.

"நாட்டிய உலகிலே இதுவரை காலமும் நான் பெற்ற அனுபவம் - அடக்கம் - உள்ளார்ந்த அறிவு எனது அடிமனதில் இருந்து மேற்கூறிய வார்த்தைகளை கிளர்ந்தெழுதச் செய்தது."

- இவ்வாறு கூறினார் கலாபூஷணம் பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணிஐயர்.

மட்டுவிலைச் சேர்ந்த திரு.திருமதி.



பரத கலா குருவிடம் ஆசி பெறும் காட்சி

ராஜலிங்கம் தம்பதிகளின் புதல்வி 'பரத கலா வித்தகர்', 'நாட்டியக் கலைமணி' செல்வி தயாளினி ராஜலிங்கத்தின் பரதநாட்டிய அரங்கேற்றம் அண்மையில் நல்லூர் இளங் கலைஞர் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த அரங்கேற்றத்தில் பங்கு பற்றி மதிப்புரை நிகழ்த்தும்போதே கவிமாமணி வீரமணிஐயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த சில ஆண்டுகளாகவும், தற்போதும் குடாநாட்டுத் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் வெளிநாடுகள் பலவற்றில் இத்தகைய பரத நாட்டிய அரங்கேற்றங்கள் நடைபெற்று வருகின்றன. எனினும் குடாநாட்டில் இத்தகைய அரங்கேற்றங்கள் ஏன் நடைபெறவில்லை என்ற கேள்விகள் எமது மனங்களில் எழுந்தவேளை அதற்குப் பதில் அளிக்கும் வகையில் தொடர்ந்து இங்கும் அரங்கேற்றங்கள் நடைபெறத் தொடங்கி விட்டன.

செல்வி தயாளினி ராஜலிங்கம் யாழ்.பல்கலைக்கழக நடனத்துறையில் கற்று 'நாட்டியக் கலைமணி' என்ற பட்டத்தைப் பெற்றுக்கொண்டவர். அது மட்டுமன்றி நீண்ட காலப் பயிற்சியின் பின்னர் நிறைவாகத் தனது அரங்கேற்றத்தை நிகழ்த்துகின்றார்.

அரங்கேற்ற வைபவத்தின் முதல் நிகழ்வாக அரங்கப் பூசை நடைபெற்றது. 'சிவமணி' சிவஸ்ரீ செ.பரமானந்தக் குருக்கள் நடராஜப்பெருமானுக்கு விசேட பூசை நிகழ்த்தினார்; தொடர்ந்து நடன விரிவுரையாளர் திருமதி கிருஷாந்தி ரவீந்திரா, நடன பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி பத்மினி செல்வேந்திரகுமார் ஆகியோர் மங்கள விளக்கேற்றினர்.

தொடர்ந்து ஆசியுரை வழங்கிய சிவஸ்ரீ செ.பரமானந்தக் குருக்கள் தனது உரையில் -

உடற் கூறுகள் அனைத்தினதும் ஒருமித்த வெளிப்பாடு பரதம். இத்தகைய பரதக் கலையைக் கற்பதென்பது மிகவும் இலகுவானதல்ல. பாரம்பரியம், பரதநாட்டிய ஞானம் என்பவை இதற்குத் தேவை. ஆடவல்லானாகிய எம்பெருமான் இந்தக் கலைக்கு இலக்கணமானவர் - என்றார்.

தொடர்ந்து திரைவிலகுகிறது. அரங்கத்திலே இசை விரிவுரையாளர் எஸ்.பத்மலிங்கம் (பாட்டு), இசைக் கலைமணி எஸ்.துரைராஜா (மிருதங்கம்), இசைஞானதிலகம் ஆர்.இராதா கிருஷ்ணன் (வயலின்), நாட்டியக் கலைமணி திருமதி யசோதரா விவேகானந்தன் (நட்டுவாங்கம், நடன அமைப்பு) ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர்.

செல்வி தயாளினி ராஜலிங்கம் புஸ்பாஞ்சலி மற்றும் அலாரிப்பு ஆகியவற்றை நிகழ்த்தினார். இந்த வேளையிலே தன்னை இந்தக் கலை உலகுக்கு அர்ப்பணித்த திருமதி யசோதரா விவேகானந்தனை வணங்கி அவரிடம் குரு ஆசியையும் இவர் பெற்றுக்கொண்டார்.

நாட்டியக் கலைமணி திருமதி யசோதரா விவேகானந்தன் தென்மராட்சிக் கல்வி வலயத்தின் நடன பாடத்துக்கான ஆசிரிய ஆலோசகர். அத்துடன் சாவகச்சேரியில் கடந்த 27 வருட காலமாக பரதநாட்டியக் கலையை மாணவர்களுக்குப் போதித்துவரும் திலகநர்த்தனாலயத்தின் முன்னணி - முதல் நிலை விரிவுரையாளரும் கூட.





தமது குடும்பத்தின் கலைக்கோயிலான - நினைவுச் சின்னமான - திலகநர்த்தனாலயத்தை இன்றுவரை (இடம்பெயர்வு ஏற்பட்டபோதும் கூட) வழிநடத்துபவரும் திருமதி யசோதரா விவேகானந்தனே. திலகநர்த்தனாலயத்தின் ஸ்தாபகரும், திருமதி யசோதரா விவேகானந்தனின் தந்தையுமான ஸ்ரீமான் க.சபாரத்தினமும் இந்த அரங்கேற்ற நிகழ்வில் மனப்பூரிப்புடன் கலந்துகொண்டிருந்தார்.

குரு ஆசியைத் தொடர்ந்து செல்வி தயாளினி ராஜலிங்கம் ஜதீஸ்வரம் நிகழ்த்தினார். இறைவன் படைத்த உடலினைக் கொண்டு அழகினை வெளிப்படுத்தும் முயற்சியாக இந்த ஜதீஸ்வரம் அமைந்தது. செல்வி தயாளினி ராஜலிங்கத்தின் நாட்டியத் திறன - அலங்காரத் தோற்றம் - அணிசெய கலைஞர்களின் ஒத்தாசை மண்டபத்தில் கூடியிருந்த அனைவரையும் நிறைந்த கலையுலகுக்கு அழைத்துச் சென்றதென்றே கூறவேண்டும்.

சபைக் கூச்சமின்றி, தான் பயின்றதை அப்படியே புலப்படுத்தும் ஆற்றல் செல்வி தயாளினி ராஜலிங்கத்திடம் இருந்தது.

ஜதீஸ்வரத்தைத் தொடர்ந்து இசைவேளை இடம்பெற்றது. எஸ்.பத்மலிங்கம் மிகச்சிறந்த பக்கவாத்தியத்துடன் இனிய பக்திப்பாடல்களைப் பாடினார். நடன வெள்ளத்தில் மூழ்கியிருந்த பார்வையாளர்களுக்கு எஸ்.பத்மலிங்கத்தின் பாட்டு அவர்களை இசை வெள்ளத்தில் மூழ்க வைத்ததெனில் மிகையில்லை.

மண்டபத்தில் இருந்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், நடன ஆசிரியர்கள், இசை, நடனத்துறை மாணவர்கள் எனப் பலரும் இந்த நிகழ்வுகளைப் பார்த்து அகமகிழ்ந்திருந்ததைக் காணமுடிந்தது.

தொடர்ந்து கணேஷ சப்தம், பதவர்ணம் என்பன இடம்பெற்றன. பதவர்ணத்தில் கண்ணனை வேண்டி, கசிந்துருகி ஆடிய ஆட்டம் (பாவம், தாளம், ராகம் என்பன கூடி) மிகவும் நன்றாக இருந்தது. 'இந்த மண்ணில் தொடரும் துன்பங்களுக்கு முற்றுப்



புள்ளி காண கண்ணா நீ மீண்டும் அவதரிக்கவேண்டும்' எனப் பிரார்த்திக்கும் வகையில் இந்த ஆட்டம் அமைந்திருந்தது.

தொடர்ந்து பதம், பாரதியார் பாடல் என்பன இடம்பெற்றன. அடுத்த இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட மேலதிக அரசாங்க அதிபரும் கலை ஆர்வலருமான து.வைத்திலிங்கம் உரையாற்றுகையில் -

இற்றைக்கு 50 ஆண்டுகளுக்கு முன்னர் எமது சமூகம் பரதநாட்டியத்தைக் கற்பதைப் பெரிதும் விரும்பவில்லை. ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது. பரதநாட்டிய அரங்கேற்றங்கள் தொடர்ந்து நடைபெறுவது உள்ளத்துக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. பாரதநாட்டின் பிரபல நாட்டிய ஆசிரியர்கள்போல் எமது மண்ணிலும் நாட்டிய ஆசிரியர்கள் உருவாகியுள்ளனர். எனவே குடாநாட்டில் பரதக் கலைக்கு நல்லதோர் எதிர்காலம் உண்டு - என்றார்.

தொடர்ந்து கீர்த்தனை, மதிப்புரை, கலைஞர் கௌரவம், நன்றியுரை, தில்லானா, மங்களம், அரங்கேற்ற நாயகி கௌரவம் என்பன நடைபெற்றன. நன்றியுரையை அரங்கேற்ற நாயகியின் சகோதரி செல்வி ஜெயந்தினி ராஜலிங்கம் நிகழ்த்தினார்.

தொகுப்பு :- ஆனந்தன்

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மணமகள் தேவை

சுவிஸ் நாட்டில் நிரந்தர வதிவிட உரிமை பெற்ற, யாழ்.இந்து கௌரவக் குடும்பத்தைச் சேர்ந்த, படித்த, 34 வயதுடைய, செவ்வாய்க் குற்றமுள்ள மணமகனுக்கு கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, அழகான, கவர்ச்சியான மணப்பெண் தேவை. ஜாதகக் குறிப்பு, உயரம், தோற்றம், குடும்ப விவரங்களுடன் தொடர்பு: விள.இல. 1369, மே/பா. உதயன். (93234)

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 26 வயதுடைய, செவ்வாய்க் குற்றமற்ற பட்டதாரி ஆசிரியருக்கும் 31 வயதுடைய, பயிற்றப்பட்ட ஆசிரியருக்கும் மணமகள்களைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். ஜாதகக் குறிப்பும் மற்றும் குடும்ப விவரங்களுடன் தொடர்பு: விள.இல.1370, மே/பா. உதயன். (93236)

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1971இல் பிறந்த (பாவம் குறைந்த - 4), அரசாங்கத்தில் உயர் பதவி வகிக்கும் பட்டதாரிக்கு, கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, படித்த, அழகிய, நற்குணமுள்ள மணமகளைத் தாயார் எதிர்பார்க்கிறார். தொடர்பு: விள.இல.1375, மே/பா. உதயன். (93349)

## வீடும் காணியும் விற்பனைக்கு

இலக்கம் 9, டேவிட் வீதியில் அமைந்துள்ள 4 அறைகள் கொண்ட மாடிவீடும் வெறும் காணியும் (5 1/2 பரப்பு) விற்பனைக்கு உண்டு. (பிரதான வீதியிலிருந்து 100யார் தூரம்). தொடர்பு: P.F.இராசையா, C.32 2/1, சொய்சாபுர மாடி வீடு, மொரட்டுவ. T.P.605761. (C/18515)

## T.V. விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Sony T.V. 2062 விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மா. குமாரசாமி, 59, சிவன் புதுவீதி, நல்லூர்,யாழ்ப்பாணம். (93354)

## வீடு விற்பனைக்கு

கே.கே.எஸ். வீதி - தட்டாதெருச் சந்திக்கு அருகில் சகல வசதிகளுடன்கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு:- ச.தங்கராசா, 953, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (93334)

## வீடு தேவை

இரண்டு பேர் தங்குவதற்கு சகல வசதிகளுடன் கூடிய வீடொன்று வாடகைக்கு உடன் தேவை. நல்ல வாடகை தரப்படும். தொடர்பு: விள. இல.1372, மே/பா. உதயன். (93323)

## விற்பனைக்கு

Electric cooker with oven, மின் மோட்டர்கள், ஆங்கில தட்டெழுத்தியந்திரம் (ஒலிம்பியா), புதிய தமிழ் தட்டெழுத்தியந்திரம் 20" (Facite), ஸ்பிறிங் கட்டில்கள், 2kW டைனமோ என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: R. ராஜன் (படப்பிடிப்பாளர்), நவாலி வீதி, ஆனைக்கோட்டை. (93192)

11/2 வயது நிரம்பிய வெள்ளை நிற பொம்மேரியன் ஆண்நாயும், 40 நாள் நிரம்பிய கறுப்புநிற பொம்மேரியன் ஆண்நாயும், ஒரு சோடி கினிக் கோழிகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செல்வநாயகம் ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (93368)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர், சேவல், பேடு விறாத் துக் குஞ்சுகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் வேண்டிய நிறைகளில் கிடைக்கும். வாடிக்கையாளருக்கு கழிவு வழங்கப்படும். தொடர்பு:- மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி. (93371)

## புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்கு

பிறிமா, சமிறா, கிறீன்வலி புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. விலை 43/=.தொடர்பு:- 'கிளின் சொட்' பின்புறம் யாழ்.பஸ் நிலையம்; இல.461, நாவலர் வீதி, அத்தியடி. (93369)

## தவறிவிட்டது

சாவகச்சேரி, சரசாலை வடக்கு முத்துலிங்கம் சிவாகரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.721072835V), விசேட அடையாள அட்டை (இல.091003247) என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் நெல்லியடி பூம்புகார் சில்க் ஹவுஸில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (C/18663)

## பருத்தித்துறை நகர குடியிருப்பாளருக்கு அறிவுறுத்தல்

வடமராட்சி,ஒக்.13

பருத்தித்துறை நகரப் பகுதியில் உள்ள விஸ்வகுல ஒழுங்கை, ஓடக்கரை வீதி, கடற்கரை வீதி ஆகிய இடங்களில் உள்ள குடியிருப்பாளர்களை கழிவுநீரை வீதிக்கு விடவேண்டாமென பருத்தித்துறை நகர சபை கேட்டுள்ளது.

இவ்வீதிகளில் கழிவு நீர் விடப்படுவதால் பாதசாரிகளுக்கும், சைக்கிள், மோட்டார் சைக்கிள்களில் செல்வோருக்கும் பெரும் அசௌகரியங்களையும், சிரமங்களையும் ஏற்படுத்துவதாகப் பொதுமக்கள் பருத்தித்துறை நகர சபைக்குப் புகார் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து குடியிருப்பாளர்களிடம் நகர சபை இக்கோரிக்கையை விடுத்துள்ளது. (க-173)

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 22 - 10 - 1978

மறைவு 13 - 10 - 1998

## செல்வி சுகந்தினி ஸ்ரீஸ்கந்தராஜா

(A/L 97 வணிகப்பிரிவு மாணவி யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

இறைவன் பாதத்தில் வாடா மலராகி...

*ஆண்டுகள் மூன்று ஆனதுவோ?*
*ஆயிரம் தீபங்கள் அணைந்தனவோ?*

ஆண்டுகள் மூன்று ஆனதம்மா!
ஆயிரம் தீபங்கள் அணைந்ததம்மா!
எங்களின் சூரியன் மறைந்ததம்மா!
இறைவனின் நீதி பிழைத்ததம்மா!
கோல இளமயிலே!
எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே!
சோலைக்கிளி மொழியே!
எங்கள் சொர்க்கத்தின் திருவுருவே!
நெஞ்சில் உறைகின்ற நேசத் தாமரையே!
நினைவில் உமை வைத்து நீள்மூச்சு வாங்குகின்றோம்!

*419, பிரதான வீதி,*
*கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.* (C/18636)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

# நெஞ்சை விட்டு அகலாத நீங்காத நினைவுகளில்

24ஆம் ஆண்டு — முதலாம் ஆண்டு



தோற்றம் 20 - 08 - 1927

மறைவு 31 - 10 - 1977



தோற்றம் 30 - 06 - 1931

மறைவு 13 - 10 - 2000

விடாமுயற்சிக்கோர் வெற்றித் தந்தை — வந்தனைக்குரியவள் எங்கள் தாய்

## அமரர் வினாசி பரமநாதன் — திருமதி யோகம்மா பரமநாதன்

பெருமையிலும் சிறுமை நீங்கள் தந்த சுகங்களெல்லாம்
ஒரு நொடியில் அழிந்ததே அப்பா! அம்மா!!
எண்ணி எண்ணி ஏங்க வைத்து எங்கே
சென்று விட்டீர்கள் அப்பா அம்மா?

*இல.215, மூத்த விநாயகர் வீதி,*
*நல்லூர் கிழக்கு, யாழ்ப்பாணம்.* (C/18660)

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# உதைபந்தாட்ட வலய மட்டப் போட்டி

யாழ்.மாவட்ட கல்விக் கோட்ட மட்டத்தில் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்று வந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் முடிவடைந்துள்ளன.

இதைத் தொடர்ந்து கோட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகள் அடுத்த வாரம் முதல் நடைபெற வலய மட்டத்தில் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

வலிகாமம் வலயமட்டப் போட்டிகள் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி, இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகிய மைதானங்களில் இடம்பெறவுள்ளன. (க-86)

# முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

13-10-2001

HAPPY BIRTHDAY



## செல்வன் குகராஜா நிருஷான்

*சங்கானையைப் பிறப்பிடமாகக் கொண்ட குகராஜா - சறோஜினிதேவி தம்பதியினரின் செல்வப்புதல்வன் நிருஷான் தனது முதலாவது பிறந்தநாளை நோர்வேயில் உள்ள தமது இல்லத்தில் இன்று (13.10.2001) சனிக்கிழமை மிகவும் குதூகலமாகக் கொண்டாடுகின்றார். இவரைப் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் நீடூழி வாழ வாழ்த்துவோர்:-*

*சங்கானை மத்தி,*
*சங்கானை.* (93157)

அப்பா, அம்மா, அக்கா
மற்றும் குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் 1929 - 09 - 11

விண்ணில் 2001 - 09 - 13

## அமரர் நீலக்குட்டி முத்துக்குமாரசுவாமி

(முன்னாள் உரிமையாளர் வாழைச்சேனை முருகன் ஸ்ரோர்ஸ்)

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்."

அன்போடும் பண்போடும் வாழ்ந்த உங்களின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (93319)

என்றும் உங்கள் நினைவுகளுடன்:

*அல்லையம்பதி,*
*துன்னாலை, கரவெட்டி.*

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# 31ஆம் நாள் நினைவலைகள்



மலர்வு 04 ★ 10 ★ 1948

உதிர்வு 12 ★ 09 ★ 2001

## அமரர் கந்தையா சுப்பிரமணியம்

*(உரிமையாளர் - நவகுமரன்ஸ் மருந்துக்கடை, மானிப்பாய்)*

*மண்ணில் தோன்றும் மலர்களைக் காலம் கவரும்*
*நெஞ்சில் தோன்றும் உங்கள் நினைவுகளை எது கவரும்?*
*அலைமோதும் கடல் கரையேறி ஆறுதல் பெறும்*
*நினைவலை மோதும் நெஞ்சிற்கு ஆறுதல் எங்கு பெறுவோம்?*

எங்கள் குலவிளக்கின் நினைவாக நாளை (14-10-2001) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும்படி எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

*காங்கேசன்துறை வீதி,*
*கோண்டாவில்.* (93300)

மனைவி, பிள்ளைகள்.

# இந்த வார இராசி பலன்

## 14 - 10 - 2001 - 20 - 10 - 2001

## மகாதேவா ஜோதிடம்

| | | | |
|---|---|---|---|
| | | சனி | வி ரா |
| | இராசிச்சக்கரம் | | |
| செ | | | சந் |
| கே | | | வெ சூ ▲ புத |

**மாற்றம்**

***14 - 10 - 2001 இல் பூரம் — சிங்கம் இராசியில் சந்திரன் நிற்கும்.***

அரசியல் மாற்றம், பல வேதனைச் சம்பவங்கள் - திடீர் திசைதிருப்பங்கள் கருத்து வேற்றுமை, மக்கள் மனமாற்றம் ஏற்படும். இளவயதினர், பெண்கள் அரசியலில் பிரவேசித்துப் பல மாற்றங்களைச் செய்வர். இந்தியா அயல் நாடுகளில் படை அனுப்பும். அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் உட்படமேற்கு நாடுகளில் பதற்ற நிலை. படைகள் யுத்த நிலை, உஷார்நிலை இருக்கும். ஆப்கானிஸ்தான் ஆட்சி மாறும். அமெரிக்காவும் ரஷ்யாவும் அதற்கு உதவி செய்வர். யுத்த மேகம் விட்டுவிட்டுப் பரவலாக மத்திய மேற்கு நாடுகளில் பரவ இடம் உண்டு. இமயத்தில் அணு ஆயுதத்தாக்கம் ஏற்பட இடம் உண்டு. பல முஸ்லிம் நாடுகளில் ஆட்சிப்பீட மாற்றம் ஏற்பட இடம் உண்டு. அத்திலாந்திக், இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளில் இயற்கையின் சீற்றமும் பசுபிக் பிராந்திய நாடுகளில்விட்டுவிட்டு செயற்கையின் தாக்கமும் ஏற்பட்டு பல அழிவுகள் உருவாகும் எனக்கிரக நிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

பந்த பாசம் இலாபம் கருதிச் செயற்படும். உண்மை நீதியைச் சொல்லும். எது வெல்லும்? ஆனால் தொழில் ஸ்தானத்தில் எந்தவிதமான பாசத்துடனும் செயற்படலாகாது. முரட்டுத்தனம், திடீர்கோபம், வீட்டு அலுவல்களில் ஈடுபாடு என்பன ஏற்படும். இடமாற்றங்கள் சகஜமாகும். சகோதரர்களின் உதவிகள் கிடைக்கும். திடீர்விபத்து, வயிற்றுக்குழப்பம், உஷ்ணபீடைகள் என்பன ஏற்படும். விவசாயத் துறை, பாதுகாப்புத்துறை, மருந்துத்துறை, சட்டத் துறை போன்றதுறையினர் களுக்கு மாற்றங்கள் ஏற்பட இடமுண்டு.

★ அதிர்ஷ்ட நாள்:- புதன்

### இடபம்

ஒருவரை ஆண்கள் ஏமாற்றுவதிலும் பார்க்க பெண்கள் ஏமாற்றுவது சுலபம். அதற்காக ஏமாறுவது, ஏமாற்றுவது சரியானதல்ல. உங்கள் தொழில் ஸ்தானங்களிலும்எதிர்ப்பாலாரால் ஏமாற்றங்கள் ஏற்படும். மேலதிகாரிகள் உதவுவார்கள். சகோதரர்களுக்காக ஓடியாடித் திரிவீர்கள். வீடு, நிலம், வாகனச் செலவுகள் ஏற்படும். குடும்பத்தில் கருத்து வேற்றுமை ஏற்படலாம். உடல் நிலை பாதிக்கும். உஷ்ண பீடைகள், நாரிப்பிடிப்பு, சலவருத்தம் வரலாம். செய்தித்துறை, இசைத்துறை, வியாபாரத்துறை, குருத்துறை போன்ற துறையினர்களுக்கு மாற்றங்கள் ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்:- புதன்.

### மிதுனம்

அவசரத்தில் எதையும் செய்து விடலாம். ஆனால் பலருக்குக் காலம் போனபின்புதான் ஞானம் பிறக்கின்றது. அதற்காக ஆப்கானிஸ்தான் மக்களுக்கு அமெரிக்கா இவ்வளவு பெரிய தண்டனைகளைக் கொடுக்கக் கூடாது தொழில் ஸ்தானத்திலும் அவசரத்தில் கருத்து வேற்றுமை ஏற்பட இடமுண்டு. பொருள்வரவு ஏற்படும். குடும்பத்தினருக்குச் சிறப்பு நடக்கும். எதிரிகள் பயந்து ஒதுங்குவர். உங்கள் ஆலோசனைகளால் பலர் நற்பலன் அடைவார்கள். அரச அதிகாரிகளின் ஆதரவு இருக்கும். மலச்சிக்கல், வாத உளைவு, வாய்வு என்பன கொடுக்கும். புடைவைத் துறை, போக்குவரத்துத் துறை, கமிஷன்துறை, சட்டத்துறை, குருத்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் ஏற்படும்.

★ அதிர்ஷ்டநாள்:- புதன்.

### கடகம்

தெய்வம் தண்டித்தால் மனிதர்கள், ஜீவராசிகள் பொறுக்க மாட்டார்கள். மனிதர்கள் ஒருவரில் ஒருவர் அன்பாக இருக்க வேண்டும். தொழில் ஸ்தானத்தில் பொறாமையால் சிலர் வேதனைகள் கொடுப்பார்கள் எதிர்ப்பாலார்கள் எதிர்ப்பார்கள். இடமாற்றங்கள் நல்லதல்ல. உங்கள் பேச்சு வசிகரத்தால் சில அலுவல்கள்நடக்கும். பொருள் வரவு ஏற்படும். இரத்த அழுத்தம், மனப்பயம், உஷ்ண பீடைகள் என்பன ஏற்படும். சட்டத்துறை, மருந்துத்துறை, விவசாயத்துறை, இசைத்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன், சனி.

### சிங்கம்

அரசபீட இராசியாகும். சத்தியம் நிலைநாட்ட சில கடுமையான செயற்பாடுகளை அரசன் செய்வதில் நியாயமுண்டு. கடந்த காலங்களில் பல துன்பங்களை சுமந்து வந்தவர்களைக் காப்பாற்ற வேண்டியது அரசனது கடமையாகும். தொழில் ஸ்தானத்தில் புதிய பொறுப்புக்கள் வரும். மேலதிகாரிகளின் ஆதரவு இருக்கும். சட்டதிட்டப்படி செயற்பாடுகள் இருக்கும். இனஜன ஆதரவு பெருகும். உஷ்ணபீடைகள், வாய்வுத் தொல்லை, காலில் நோ, நாரிப்பிடிப்பு என்பன ஏற்படும். சட்டத்துறை, சமயத்துறை, ஆசிரியத்துறை, ஹோட்டல்துறை, இசைத்துறை போன்ற துறையினர்கள் இலாபங்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன், சனி.

### கன்னி

தர்மத்தைச் செய்கின்ற — போதிக்கின்ற — ஒருவர் தன் மனைவிக்கு தாம் வாழ்ந்த நாற்பது வருஷத்தில் ஒரு சேலைவாங்கிக் கொடுத்திராதது போலச் சிலர் நடக்கின்றனர். எனவே தன் உள்வீட்டுத் தேவைகளை நியாயப்படி நிறைவேற்றுவது கடமையாகும். தொழில் பீடத்தில் மாற்றங்கள், புதிய பொறுப்புக்கள் ஏற்படும். பிறருக்கு ஆலோசனை, உதவிகள் செய்வீர்கள். மேலதிகாரிகளுடன் கருத்து வேற்றுமை ஏற்படும். இனஜன விரோதம் வரும். கைகால் உளைவு. மூலவருத்தம், இரத்த நோய், கொடுக்கும். எண்ணெய்த்துறை, வியாபாரத்துறை, வாகனத் துறை, இசை. ரீ.வி. விடியோ கொம்பியூட்டர் துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன். சனி.

### துலாம்

உண்மையான நீதியைத்தான் இரவு பகலாக உழைக்கும் உத்தமர்கள் எதிர்பார்க்கிறார்கள். கடந்த காலங்களில் இருண்ட பாதைகளைக் கடந்து போராடி வந்தவர்கள் பட்டதுன்ப வேதனைகளுக்கு ஆறுதல் கொடுக்க வேண்டியது சத்தியவான்களது கடமையாகும். தொழில் ஸ்தானத்தில் பல அபிப்பிராயங்களை ஆராய்வீர்கள். பல களவுகள் மறைந்துள்ளதை அறிவீர்கள். உரிய நேரத்தில் உண்மைகள் பல வெளியாகிவருவதை உணருவீர்கள். படபடப்பு, கருத்துக் குமுறல். நரம்புப்பிடிப்பு, தலைவலி, சளித்தொல்லை என்பன வரலாம். பிரயாணத்துறை, சட்டத்துறை, பாதுகாப்புத்துறை, குருத்துறை, வியாபாரத்துறை போன்ற துறையினர்களுக்கு மாற்றங்களும் நன்மைகளும் ஏற்படும்.

★ அதிர்ஷ்டநாள்கள்:- புதன், வியாழன், சனி.

### விருச்சிகம்

மனிதனை, மனிதன் தண்டிக்கலாம். சட்டத்திலிருந்து குற்றங்களைச் செய்பவன் மற்றவர்களுக்குத் தெரியாது என ஏமாற்றலாம். ஆனால் நீதிதேவதையான சனீஸ்வரன் தன் ஆதி காலங்களில் நிச்சயம் தண்டனை கொடுப்பான். உங்கள் தொழில்ஸ்தானத்திலும் மறைமுகமாக நடக்கும். ஏமாற்றங்களைக் கண்டு வேதனைப்படுவீர்கள். அயலவர்கள் உதவி செய்வார்கள். நண்பர்களை நம்பவேண்டாம். குடும்பத்தில் கருத்து வேற்றுமை. அடிக்கடி ஏதாவது சாப்பிடவேண்டும்போல இருக்கும். சிரசு வருத்தம், சல வருத்தம், தொண்டை நோ, அடி வயிற்றுப் பொருமல் என்பன வரும். பிரயாணத்துறை, குருத்துறை, இசைத்துறை, செய்தித்துறை, வங்கித்துறைபோன்ற துறையினர்கள்நன்மைகள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்டநாள்கள்:- புதன், வியாழன், சனி.

### தனுசு

சட்டத்தைஏமாற்ற பணம், பதவிகளைச் சிலர் பாவித்து வென்றுவிடலாம். ஆனால் தர்மம் பின்தொடர்ந்து நீதியை நிலைநாட்டும் என்பது நிச்சயம். தொழில் ஸ்தானத்தில் கருத்து வேற்றுமை. ஆயினும் புதிய பொறுப்பு, புகழ் பரவும். பணவரவு ஏற்படும். சகோதரங்கள், பிள்ளைகளிடமிருந்து மகிழ்ச்சியான செய்திகள் வரும். இடாம்பீகச் செலவுகள் அதிகரிக்கும். உங்களைக்கண்டு எதிரிகள் பதுங்குவார்கள். குடும்பத்தில் எதிர்ப்பாலாருடன் கருத்து வேற்றுமை வரும். வாய்வுத் தொல்லை, அடிவயிற்றுநோ, கைகால் பிடிப்பு, தலையிடி என்பன வரும். வைத்தியத் துறை, அரசியல்துறை, குருத் துறை போன்ற துறையினர்களுக்கு மாற்றம் ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- ஞாயிறு, புதன், வியாழன், சனி.

### மகரம்

ஆலமரம் பலமான பெரிய மரமாயிருந்தாலும் எல்லா வேர்களும் பலமாக வேரூன்றும் என நம்பமுடியாது. இதேபோன்று பதவிகளிலும் சில பலவீனமானவர்கள் உட்பிரவேசிக்கலாம். தொழில் ஸ்தானத்தில் உங்கள் சொற்களுக்கு மதிப்பிருக்காமல் போகலாம். இடமாற்றங்கள் சகஜம். நண்பர்கள் பகைவர்களாவர். இடாம்பீகப் பொருள் செலவுகள் அதிகரிக்கும். எதிர்ப்பாலாரால் செலவுகள் அதிகரிக்கும். நாரிநோ, நரம்புப் பிடிப்பு, தலையிடி, நெஞ்சு வருத்தங்கள் என்பன வர இடமுண்டு. ஆசிரியத்துறை, மருந்து, இரும்பு, விவசாயத்துறை, சட்டத்துறை, கோவில்துறை போன்ற துறையினர்கள் இலாபம் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- ஞாயிறு, வியாழன், சனி.

### கும்பம்

ஆண்டவனிடம் கணக்குக் கொடுப்பதாகச் சிலர் நடிக்கின்றார்கள். அவர்களின் நடிப்பையும் இறைவன் கணக்குப் போட்டபடிதான் இருக்கின்றார். அரசியலில், கல்விப் பீடங்களில், வியாபார பீடங்களில், ஆட்சிப்பீடங்களில், இறைபீடங்களில் மனிதர்கள் கவனமாக இருப்பது நன்று. உங்கள் தொழில் ஸ்தானத்தில் பொருள் விஷயமாகக் கருத்து வேற்றுமை வரலாம். மேலதிகாரிகளின் சீற்றத்திற்கு முகம் கொடுக்க நேரிடும். உறவுமுறைக் கருத்துக்கலகம், இடமாற்றம் வைத்தியச் செலவு, தலையிடி, கால்நோ என்பன கொடுக்கும். வியாபாரத்துறை, குருத்துறை, சட்டத்துறை, பாதுகாப்புத் துறை, விவசாயத்துறை, போக்குவரத்துத் துறை போன்ற துறையினர் இலாபம் அடைவர்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- ஞாயிறு. வியாழன், சனி.

### மீனம்

குருவுக்கு—குருபீடத்திற்கு—அழிவுகளைச், செய்பவர்கள், அவர்களின் சாபத்துக்கு ஆளாகி அழிவுகளை, துன்பங்களை அடைவார்கள். இதைமாணவர்கள், இளம் சந்ததிகள் அறிந்து கொள்ள நல்லவர்கள், பெரியவர்கள் எடுத்துக்கூற வேண்டும். இடுப்புவருத்தம், சளித் தொல்லை, கால்வருத்தம், நரம்புப்பலவீனம் என்பன கொடுக்கும். பிரயாணத் துறை, கடல்துறை, மருந்துத் துறை, குருத்துறை போன்ற துறையினருக்கு மாற்றங்களும் இலாபங்களும் ஏற்படும். பிரயாண வாய்ப்புக்களை தூரதேச ஒழுங்கு முறையில் செய்யவும். கடன்தொல்லைகளால் மனக்கிலேசம் வர இடமுண்டு.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- ஞாயிறு, வியாழன், சனி.


## கண்ணீர் அஞ்சலி

யா/ கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்

திரு. கந்தையா இராஜேந்திரம்

அவர்களின் அருமைத் தாயார்

**திருமதி கந்தையா பத்தினிப்பிள்ளை**

அவர்கள் 12-09-2001 இல் இறைவனடி சேர்ந்தமையையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினையும், அமரருக்கு எமது அஞ்சலியையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.


அன்னாரது ஆத்மா சாந்தி அடைவதாக.

பாடசாலைச் சமூகம்.

யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தி.

கொக்குவில். (93370)

## 10 ஆம் வருட நினைவு நாள்



தோற்றம் 17 — 03 — 1935

மறைவு 13 — 10 — 1991

**திருமதி ஞானம்மா இம்மானுவல்**

திதி: 2001 - 10 - 13

அன்னை என்னும் தெய்வம்
அன்பு செய்யும் தெய்வம்
எம்மை விட்டுப் பறந்து
ஆண்டுகள் பத்துப் போயினும்
மறப்போமோ உம் திருவதனம்?

உமது அன்புக்காக ஏங்கும்:

கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், மைத்துனர்கள்.

தகவல்:- திரு. க. நவரத்தினம் (மைத்துனர்)
பொன்னையா லேன்,
ஆனைக்கோட்டை. (93379)

## நன்றியோடு பாராட்டுகின்றோம்



யா/இருபாலை சீ.சி.த.க. பாடசாலை மாணவியும்
தற்போது
யா/இராமநாதன் கல்லூரி மாணவியுமான
இராமநாதன் மனோரஞ்சிதம்
தம்பதியினரின் புதல்வி

### செல்வி ஆதித்தியா

2001 ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 121 புள்ளிகளைப் பெற்றமைக்காக அவரைப் பாராட்டுவதுடன், பெறு பேற்றைப் பெற வழிகாட்டிய இரு கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்களையும் அயராது அறிவூட்டிய வகுப்பாசிரியர் திருமதி எஸ். ஸ்ரீதரன அவர்களையும் மற்றும் கல்வி நிறுவனங்களையும் நன்றியோடு வாழ்த்துகின்றோம், பாராட்டுகின்றோம்.

தகவல்:
E.நிமலன் (அண்ணா),
(கொழும்பு A.M.T)
R.திவாகரி (தங்கை)

*மருதனார் மடம்.*
(93363)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எங்கள் சென்ஜோன் அம்புலன்ஸ்
படை உத்தியோகத்தர்
செல்வன்
அருந்தவராஜா நித்தியநர்மதன்

*மாண்புமிகு ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க அவர்களிடம் நேரடியாக சாரணர் ஜனாதிபதி விருது பெறச் செல்வதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். தேசிய பாசறை போட்டிகளில் சரித்திரம் படைக்க இவர் காரணமாக இருந்தார். சாரணர்களின் மாவட்ட ஆணையாளர்* **N.சௌந்தரராஜன்** *அவர்களையும் பாராட்ட சென்ஜோன் அம்புலன்ஸ் கடமைப்பட்டுள்ளது.*

*உத்தியோகத்தர்கள்,*
*யாழ்.மத்திய மாவட்டம்.* (93366)
3, ஜம்பூரி குழுவினர்களும்,
சென்ஜோன் அம்புலன்ஸ்ும்.

## 31 ஆம் நாள் நீங்கா நினைவுடன்...



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 1977 | 2001 |
| 11 | 09 |
| 06 | 13 |

### திருமதி அனோஜா நரேஸ்குமார்

அன்புக்கினியவளே! ஆறவில்லை எம்மனம்,
நெஞ்சம் கனக்குதம்மா, நிலைகெட்டுத் தவிக்குதம்மா!
பிஞ்சு மழலைகள் இங்கு பதறி அழுகின்றதம்மா!
நிழல் தந்த விருட்சம் வேரோடு சாய்ந்ததுவோ?
இறைவனின் பாதத்தில் சேர்ந்து நீடுழி வாழ்க!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எங்கள் அன்பு மகளின் மறைவை அறிந்து உடன் வந்து ஆறுதலளித்த அன்பு நெஞ்சங்களுக்கும், அஞ்சலி செலுத்தியோருக்கும் எமக்குப் பல வழிகளில் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*ஏழாலை மத்தி,*
*ஏழாலை*
- குடும்பத்தினர். (93367)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| மண்ணுலக சாட்சி வாழ்வுக்காய் | விண்ணுலக நல் வாழ்வுக்காய் |
| --- | --- |
| 18 | 12 |
| 08 | 09 |
| 1933 | 2001 |

### திருமதி அபிராமி பாலசிங்கம்

*(ஓய்வுபெற்ற ஆசிரியை, யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை)*

தென்மட்டுவில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க ஆரம்பகாலம் முதல் தலைவராகவும், தற்போது போஷகராகவும், தேனொளி முன்பள்ளியின் வளர்ச்சிக்கு உறுதுணையாகவும், காப்பாளராகவும் சேவையாற்றி இறைபதமடைந்த உங்களுக்கு இன்று 31ஆம் நாளில் எமது கண்ணீர்ப் பூக்களை அஞ்சலியாகச் சமர்ப்பிக்கின்றோம்.

- மாதர் கிராம அபிவிருத்திச்சங்கம்.

*தென்மட்டுவில்.* (93364)

## பிரதம தபாலகத்திற்கு முத்திரைகள் வந்தன

யாழ்ப்பாணம்,ஒக்.13

காங்கேசன்துறைக்கு நேற்றுமுன் தினம் வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 352 தபாற்பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

இதேகப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட தபால்கள் அடங்கிய 50 தபாற்பொதிகள் அனுப்பிவைக்கப்பட்டதாகத் தபாற்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை -

யாழ்பிரதம தபாலகத்துக்கு ஒரு தொகுதி சாதாரண முத்திரைகளும் எடுத்துவரப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (க-10)

## பனம் விதை நடுகை வைபவம் நாளை

அச்சுவேலி,ஒக்.13

உப்புவல்லை - மண்டான் வீதிப் பகுதியில் 20 ஆயிரம் பனை நடும் வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

கரணவாய் தெற்கு, செல்வாபுரம் இளங்கோ ஐக்கிய நாணய கூட்டுறவுச்சங்கம் கரணவாய்ப் பகுதியில் உள்ள நான்கு ஐக்கிய நாணய கூட்டுறச்சங்கங்களின் உதவியுடன் பனம் விதை நடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (க-11)

## பரிசளிப்பு விழா

அச்சுவேலி,ஒக்.13

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை அதிபர் வே.பாலசுப்பிரமணியம் தலைமையில் வித்தியாலய கலை அரங்கில் நடைபெறும்.

பிரதமவிருந்தினராக மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் சி.சிவராசா கலந்துகொள்வார். (க-11)

## விவசாய சம்மேளனங்கள் மீள்பதிவு

யாழ்ப்பாணம்,ஒக்.13

யாழ்.மாவட்டத்தில் உள்ள விவசாய சம்மேளனங்கள் அனைத்தையும் மீள்பதிவு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2000ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் மீள்பதிவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் -

இது தொடர்பான கூட்டங்கள் யாவும் நவம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்பு கூட்டப்பட்டு பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

சம்மேளனங்கள் தமது பகுதி பெரும்பாக உத்தியோகத்தர்களுடன் தொடர்புகொண்டு கூட்டத்துக்கான திகதியை நிர்ணயம் செய்து உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-10-ரி)

## விழிப்புலனற்றோர் கல்விக்கென நிதியம் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.13

யாழ்.மாவட்டத்தில் உள்ள விழிப்புலனற்றோரின் கல்வி நிலையை மேம்படுத்தவென நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த கண் பார்வை அற்ற பிள்ளைகளின் கல்வியைத் தடையின்றி மேற்கொண்டு சமுதாயத்தில் சமமான நற்பயனுள்ள பிரஜை ஆக்குவதற்கு இந்நிதி பயன்படுத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்நிதியத்துக்குத் தாராளமாக உதவி செய்யுமாறு அனைவரையும் யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-117)

## வாடகைக்கு

உடுவில், மானிப்பாய் வீதியில் ஓராம் கட்டையடியில், 18 பரப்பில், விஸ்தீரணமான வீடு (தொழிற்சாலைக்கு உகந்தது) வாடகைக்கு உண்டு.

*தொடர்பு:-*
டான்போத்,
டச்சு வீதி, உடுவில்.
(93381)

## வாழ்த்தி மகிழ்கின்றோம்



யாழ்.பல்கலைக்கழகத்தினால்
"முதுகலைமாணி" பட்டம் வழங்கிக்
கௌரவிக்கப்பட்ட எமது
பிரதேசத்தைச்சேர்ந்த
**அருட்கவி சீ.விநாசித்தம்பி ஐயா**
அவர்களை இதய பூர்வமாக வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

*அளவெட்டி, மல்லாகம் ப.நோ.கூ.சங்கம்,*
*கூட்டுறவாளர் வீதி,*
*அளவெட்டி.* (C/18670)

தலைவர்,
பணிப்பாளர்கள்,
பொது முகாமையாளர்,
பணியாளர்கள்.

## விண்ணக வாழ்வில் 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
| --- | --- |
| 10 | 13 |
| 03 | 09 |
| 1937 | 2001 |

அமரர்

### தம்பையா தங்கவடிவேல்

எமது அன்புத் தந்தையே! குடும்பத்தின் ஒளிவிளக்கே!
மாதம் ஒன்று ஆனதையா! மறக்கவில்லை உங்கள் முகம்!
அமைதியின் இருப்பிடமே! ஆறவில்லை எங்கள் மனம்!
பெற்ற எம்மைத் தவிக்கவிட்டு! விண்ணகம் சென்றதேனோ? பிரிவால்
தேற்றுவார் யாருமின்றி நாம் தவிக்கின்றோம் தரணிதனில்!

இன்று (13-10-2001) சனிக்கிழமை திருநாவலூர் தெணியம்மன் (எரிஞ்சம்மன்) ஆலயத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்.

*ஆத்தியடி,*
*பருத்தித்துறை*
*(தொண்டைமானாறு).*
(93374)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி புஸ்பராணி சிவப்பிரகாசம்

திதி: அபரபட்ச துவாதசி 13.10.2001

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 18-04-1949 | 24-09-2000 |


ஆண்டு ஒன்று ஆனதம்மா!
ஆறவில்லை எங்கள் இதயமம்மா!
துன்பச் சுமையைத் தாங்காது
துடிக்குது எங்கள் இதயமம்மா!
இலங்கையை விட்டுச் சென்று
இந்தியாவின் இன்புத் தமிழகத்தில்
இன்னுயிர் நீத்த எங்கள் அன்புத் தெய்வமே!

*உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்,*

கணவர், பிள்ளைகள்,
மருமகன், சகோதரர்,
மைத்துனர்.

*பொற்பதி வீதி,*
*கொக்குவில் கிழக்கு.*
(93378)

## சேவை நலன் பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயத்தின்
கனிஷ்ட அதிபர்

### திரு. நாகரத்தினம் விக்கினேஸ்வரன்

(S.L.T.S. வகுப்பு I)

அவர்கள் தமது 60ஆவது வயதில் சேவையில் இருந்து இன்று (13.10.2001) சனிக்கிழமை ஓய்வுபெற்றுச் செல்கிறார்.

**ஆசிரிய சேவை விபரம்**

1. 18.09.1971 - 09.01.1973 - ஆசிரியர், ந/ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரி
2. 10.01.1973 - 31.12.1974 - பயிற்சி ஆசிரியர், யா/கோப்பாய்பத்தாசு ஆசிரிய கலாசாலை.
3. 01.01.1975 - 11.05.1975 - ஆசிரியர், மன்/விடத்தல்தீவு றோ.க. பாடசாலை.
4. 12.05.1975 - 31.12.1981 - ஆசிரியர், மன்/இலுப்பைக்கடவை அ.த.க. பாடசாலை
5. 01.01.1982 - 14.01.1995 - ஆசிரியர், யா/சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம்.
6. 15.01.1995 - 12.10.2001 - கனிஷ்ட அதிபர், யா/சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம்.

இவர் தமது சேவையில் இருந்து ஓய்வுபெறுவது உண்மையில் பாடசாலைக்கு ஒரு பேரிழப்பாகும். பாடசாலையின் வளர்ச்சிக்கும், மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கும் தன்னை எப்பொழுதும் அர்ப்பணித்து செயற்பட்டவரும், பாடசாலைச் சமூகத்தை அரவணைத்து ஒரு குடும்பம் போல கடமை, பொறுப்புணர்வுடன் சேவையாற்றிய நல்லாசிரியர். அவர், ஆசிரியத் தொழிலில் இருந்து ஓய்வுபெற்றாலும் அவரின் பணி சமூகசேவையிலே தொடரவேண்டுமென வாழ்த்துகின்றோம்.

அவரும் அவர்தம் குடும்பத்தினரும் மேலும் பல சிறப்புக்கள் பெற்று பல்லாண்டு காலம் வாழ எங்கள் அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் திருவடிகளை வணங்கிப் பிரார்த்தித்துப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம்,
யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்,
சுதுமலை. மானிப்பாய். (93395)

---

*மானிப்பாய் இந்துக் கல்லூரி (ஆண்டு 6 ஆண்)*
*மானிப்பாய் மகளிர் கல்லூரி (ஆண்டு 1 ஆண், பெண்).(ஆண்டு 6 பெண்)*

### வகுப்புகளுக்கான அனுமதி - 2002

*மேற்படி பாடசாலைகளில் தரம் 1, தரம் 6 இற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை அந்தந்தப் பாடசாலைகளில் பெற்று, எதிர்வரும் (30.10.2001) செவ்வாய்க்கிழமைக்குமுன் உரிய பாடசாலை அலுவலகங்களில் ஒப்படைக்கவும். பிந்திய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.*

**-அதிபர்கள்.**

(93388)

---

*வேலணை பிரதேச சபை*

### வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2001

*கால நீடிப்பு*

*மேற்படி விடயம் தொடர்பில் எம்மால் 09-10-2001 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் சார்பானது. கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளும் திகதி 12-10-2001 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தற்சமயம் 15-10-2001 ஆம் திகதி பிற்பகல் 2 மணி வரை என காலநீடிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறேன்.*

ந. கருணாகரகுருமூர்த்தி (ஜே.பி.யு.ஸ்.)
தலைவர்,
வேலணை பிரதேச சபை.

வேலணை பிரதேச சபை,
வேலணை. (C-18677)

---

### யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.

தற்போது இவ்வித்தியாலயத்தில் க.பொ.த. (உ.த.) வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்களுடைய பெற்றோரை 15-10-2001 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நெல்லியடியிலுள்ள *கிறிஸ்ரல் கல்வி நிலையத்திற்கு* தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

த. கந்தையா
(அதிபர்)

(93379)

---

## கண்ணீர் அஞ்சலி

வேலணை பிரதேச சபைத் தலைவர்
உயர்திரு. என். கருணாகரகுருமூர்த்தி
*அவர்களின் அன்புத் தாயார்*

### திருமதி நமசிவாயம் மனோன்மணி

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், உபதலைவர்,
உறுப்பினர்கள், செயலாளர்,
ஊழியர்கள்.

பிரதேச சபை,
நெடுந்தீவு. (93392)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

**வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு**

**வெளிவாரிப் பரீட்சைகள்**

1. வணிகமாணி - பகுதி - III - 2000
2. வணிகமாணி - பகுதி - II - 2000

மேற்படி பரீட்சைகள் இவ்வருடம் டிசெம்பர் மாத முற்பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் வவுனியா வளாகத்திலும் நடைபெற வுள்ளன. இப்பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் பரீட்சார்த்திகள் யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 15/= இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவத்தினைப் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்.பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 15/= இற்கான காசுக்கட்டளை/தபாற் கட்டளையை சுயமுகவரி இடப்பட்ட, முத்திரை ஒட்டப்பட்ட நீள் தபால் உறையுடன் "உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

பரீட்சார்த்திகளிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2001.11.09 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

- பதிவாளர்.
12-10-2001 (C/18686)

---

## அறிவித்தல்

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**இலங்கை**

பௌதிக விஞ்ஞான கற்கைநெறி - 2001/2002

*(வெற்றிடம் நிரப்பும் பட்டியல் - 01)*

பௌதிக விஞ்ஞான கற்கை நெறிக்கு வெற்றிடம் நிரப்பும் பட்டியல் - 01 இல் மேலதிகமாக 24 பேர் தெரிவாகியுள்ளனர். இவ்விபரங்களை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி காரியாலய விளம்பரப் பலகையில் பார்வையிடலாம்.

ஏற்கனவே அறிமுக நிகழ்ச்சிகள் ஆரம்பமாகியுள்ளபடியால் தெரிவான மாணவர்கள் தங்கள் பதிவினை 22.10.2001 இற்கு முன்னர் மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்.

விஞ்ஞான பீட விரிவுரைகள் 15.10.2001 அன்று ஆரம்பமாகவுள்ளன.

பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்,
11.10.2001 (C/18683)

---

**ஸ்ரீ செல்வா சினிமா**
**யாழ்ப்பாணம்**

பிரபு, ரோஜா
நடித்த
**மிட்டா மிராசு**
ஞாயிறு முதல் சரத்குமாரின்
**கேப்டன்**
தினசரி: 10.30, 2.30 (பழைய நேரம்)

---

**ராஜா யாழ்ப்பாணம்**

விஜய், சிம்ரன்
நடித்த
**ப்ரியமானவளே**
தினசரி: 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30, 2.5 (புதிய நேரம்)
(C/18457)

---

**நாகம்ஸ் சுன்னாகம்**

சரத்குமார், தேவயானி, விக்ரம்
நடித்த
**விண்ணுக்கும் மண்ணுக்கும்**
(சீஸன்)
காட்சிகள்: 11.00, 2.30 (புதியநேரம்)
(93383)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

*எமது வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச பதில் பொது முகாமையாளர்*

### திரு. வேலாயுதம்பிள்ளை தவப்புதல்வன்



B.B.A. (F.M. spl)

*அவர்கள் கடந்த 06.10.2001இல் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் 'தொழில் நிர்வாக மாணி' பட்டம் பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டுவதோடு, அவர் சகல துறைகளிலும் சீரும், சிறப்பும் பெற்று உயர்வடைய வாழ்த்துகின்றோம்.*

தலைவர்,
பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.

யாழ்ப்பாணம். (C-18675)

---

## பாராட்டி வாழ்த்துகிறோம்



யாழ்.பல்கலைக்கழகத்தின் 20ஆவது பட்டமளிப்பு விழாவில் செல்வன் வ.வேல்முருகன் அவர்களுக்கு B.B.A. (F.M. spl) என்னும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டமைக்காக அவரை மனமாரப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

தெல்லியூர் நண்பர்கள்.

(93391)

---


## மலிவு விலையில்

*மேலும் புதிய CD'S*
***RIBBON, PRINTERS, SCANER, CARTRIDGES, MOUSE, LAMINATING PAPER, FLOPPY DISKETS.***
*இன்னும் பல* (C/18679)

**SRI MURUGAN**
**303, K.K.S. ROAD, JAFFNA**


---

We Serve

## கண்ணீர் அஞ்சலி

*யாழ். லயன்ஸ் கழகத்தின்*
*முன்னாள் தலைவரும், நீண்டகால உறுப்பினருமான*
**லயன் கதிரவேலு J.P.**
அவர்களின் பாசமிகு தாயார்

### திருமதி நமசிவாயம் மனோன்மணி

அவர்களின் மறைவையிட்டு துயருறும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், அங்கத்தவர்கள்,
யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகம்.

(93392)

---

## மரண அறிவித்தல்கள்

### சிதம்பரப்பிள்ளை தம்பித்துரை

சுன்னாகம், பருத்தி கலட்டியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை தம்பித்துரை (ஓய்வுபெற்ற புகையிரத உத்தியோகத்தர்) நேற்றுமுன்தினம் (11-10-2001) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கீரிமலையைச் சேர்ந்த சிவராசரத்தினத்தின் அன்புக் கணவரும், மங்களேஸ்வரி, சிறிரஞ்சினி, பத்மநாதன், காந்தினி, நந்தினி, மாலினி, சிதம்பரநாதன், ரகீஸ்கரன், விமலினி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 11-10-2001 வியாழக்கிழமை உரும்பிராய் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் தெற்கு.

தகவல்:-
சிவஸ்ரீ குணசேகரம் (குருக்கள்)
குநந்தினி

(C/18676)

---

### அருட்செல்வி ஆன்மேரி சைமன் தி.கு.

கொழும்பு, மருதானையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சைமன் - பொன்னம்மா தம்பதியினரின் ஏக புத்திரியும், யாழ்.திருக்குடும்ப சபையின் துறவியுமான அருட்செல்வி ஆன்மேரி சைமன் நேற்று (12-10-2001) வெள்ளிக்கிழமை வவுனியா திருக்குடும்ப இல்லத்தில் காலமாகிவிட்டார்.

இவரது பூதவுடல் இன்று (13-10-2001) சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வவுனியா புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெறும் இரங்கற் திருப்பலி பூசையுடன் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உறவினர், நண்பர், அருட்தந்தையர், அருட்சகோதரிகளுக்கு அறியத்தருகின்றேன்.

திருக்குடும்ப மாகாண இல்லம்,
121, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (93401)

தகவல்:-
அருட்செல்வி
அன்சிலா ஜேம்ஸ்
(மாகாண தலைவி)

# பின்லேடனை ஒப்படைக்க மீண்டும் ஒரு சந்தர்ப்பம்

## தலிபான்களுக்கு அமெரிக்கா வழங்கியது

நியூயோர்க்,ஒக்.13

அமெரிக்காவினால் தேடப்பட்டு வரும் ஒஸாமா பின்லேடனை ஒப்படைப்பதற்கு அமெரிக்கா தலிபான்களுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்கியுள்ளது.

"பின்லேடனையும் 'அல்கெய்டா' அமைப்பின் உறுப்பினர்களையும் அமெரிக்காவிடம் ஒப்படைத்தால், ஆப்கானிஸ்தான் மீதான தாக்குதல் குறித்து பரிசீலனை செய்யப்படும்" - என்று அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் நேற்றுக்காலை செய்தியாளர் மாநாட்டில் பேசுகையில் தெரிவித்தார்.

ஆனால், அமெரிக்காவின் இந்த அறிவிப்பை தலிபான் நிர்வாகம் அடியோடு நிராகரித்துவிட்டது.

பின்லேடனை அமெரிக்காவிடம் கையளிப்பது தலிபானின் கொள்கைக்கும் இஸ்லாமியர்களின் கோட்பாடுகளுக்கும் முரணானது என்று பாகிஸ்தானுக்கான ஆப்கான் தூதர் கூறியிருக்கிறார். (ம)

# தலிபான் தலைவரின் வீடு மீதும் தாக்குதல்

## அவரது மகன் பலி!

இஸ்லாமாபாத்,ஒக்.13

தலிபான்களின் பெருந் தலைவர் முல்லா முகமட் ஓமரின் வீட்டின் மீதும் அமெரிக்க விமானங்கள் நேற்று குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளன.

இந்தத் தாக்குதலில் ஓமரின் 10 வயது மகனும் சித்தப்பா ஒருவரும் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

முல்லா ஓமர் தனது வீட்டை விட்டு வெளியேறிய சிறிது நேரத்திலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றது.

தாக்குதல் நடந்த சமயத்தில் ஓமரின் உறவினர்கள் பலர் அங்கிருந்தனர். எனினும் இவர்களில் பலர் தாக்குதல் ஆரம்பமான உடனேயே வீட்டைவிட்டு வெளியேறி ஓடித் தப்பிவிட்டனர். (ம-10)

# அத்வானியை கொல்லச் சதி: முறியடித்ததாக அறிவிப்பு!

சென்னை,ஒக்.13

இந்திய உள்துறை அமைச்சர் எல்.கே.அத்வானியை சென்னையில் வைத்துக் கொல்வதற்கு மேற்கொள்ளப்பட்ட சதித்திட்டம் ஒன்றைத் தாம் முறியடித்துவிட்டதாக தமிழகப் பொலஸார் தெரிவித்தனர்.

எதிர்வரும் 18ஆம் திகதி பாரதிய ஜனதாக்கட்சித் தலைவர் ஜனா.கிருஷ்ணமூர்த்தியின் மகனது திருமணத்தில் கலந்துகொள்ள வருகைதரும்போது அத்வானியைக் கொல்லத் திட்டமிடப்பட்டிருந்ததாகச் சென்னைப் பொலீஸார் கூறுகின்றனர். இந்த சதித்திட்டத்தை மும்பைப் பொலீஸாரும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்தச் சதித்திட்டம் தொடர்பாக 6 முஸ்லிம் இளைஞர்களையும் பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

ஏற்கனவே அத்வானியைக் குறிவைத்துள்ள முஸ்லிம் தீவிரவாதிகள் தற்போது, ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்கத் தாக்குதல்களுகு இந்திய அரசு ஆதரவு தெரிவித்து வருவதை அடுத்து அவரைக் கொல்லும் நோக்குடன் மிகத் தீவிரமாகச் செயற்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது. (ம-10)

# களுத்துறைச் சிறைக் கைதிகள் உண்ணாவிரதமிருக்க முஸ்தீபு!

கொழும்பு,ஒக்.13

தமது விடுதலைக்குரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதனால் உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்போவதாக களுத்துறைக் கைதிகள் தமது சட்டத்தரணிகளுக்கும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான விநாயகமூர்த்தி, அடைக்கலநாதன் ஆகியோருக்கும் நேற்றுக் கடிதம் அனுப்பியுள்ளனர். 750 கைதிகள் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர்களில் 100க்கும் அதிகமானவர்கள் 5 வருடங்களுக்கும் மேலாக விசாரணைகளின்றித் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சிலருககு வழக்கு விசாரணைகள் தொடுககப்பட்டிருக்கின்ற போதும் அவை தேவையற்றமுறையில் பிற்போடப்படுவதாகத் தமது கடிதத்தில் கைதிகள் குறிப்பிட்டுள்ளனர். இதனால் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அவர்கள் எச்சரிக்கை செய்துள்ளனர். முன்பு சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தபோது வாக்குறுதிகள் வழங்கப்பட்டு அது தடுக்கப்பட்டு விட்டதாகவும், இம்முறை யாரும் தம்மைத் தடுக்க முடியாது என்றும் கைதிகள் தமது கடிதத்தில் கூறியுள்ளனர். (ஐ)

## கிணற்றினுள் மனித எலும்புக்கூடு

வவுனியா,ஒக்.13

கிளிநொச்சி பெரிய பரந்தன் பகுதியில் முதலாம் வாய்க்கால் என்னும் இடத்தில் கிணறு ஒன்றில் இருந்து மனித எலும்புக்கூடு ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.

வீட்டுக்காணியைத் துப்புரவு செய்துகொண்டிருந்த ஒருவர் அங்குள்ள கிணறு ஒன்றில் எலும்புக்கூடு ஒன்றைக் கண்டு காவல்துறையினருக்குத் தகவல் கொடுத்தார். பின்னர் காவல்துறையினர் அதனை மீட்டனர். (ஐ-3)

## முல்லைக் கடலில் மோதல்

கொழும்பு,ஒக்13

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் நேற்று முற்பகல் கரையில் இருந்து சுமார் 9 கடல் மைல் தொலைவில் காணப் பட்ட விடுதலைப் புலிகளின் இரு படகுகள்மீது கடற்படையினர் தாக் குதல் நடத்தியதை அடுத்து கடற்படை யினருக்கும் விடுதலைப் புலிகளுக் கும் இடையில் கடற்சமர் இடம்பெற்ற தாக விசேட ஊடகத் தகவல் நிலை யம் தெரிவித்தது.

விடுதலைப் புலிகளின் இரு படகுகளில் ஒன்று முற்றாக அழிக்கப்பட்டதாகவும் -

மற்றைய படகு சேதமாக்கப்பட்டது என்றும் - தகவல் நிலையம் தெரிவித்தது.

இந்தத் தாக்குதல்களில் கடற்படையினருடன் விமானப்படையினின் கிபிர் விமானங்களும் ஈடுபட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதல் தொடர்பாக விடுதலைப் புலிகளின் தரப்பில் தகவல் எதுவும் நேற்றிரவுவரை வெளியாகவில்லை. (ஐ-3)

## வாசுதேவாவை தம் பக்கம் இழுக்க முயற்சி

கொழும்பு,ஒக்.13

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்காரவை தம் பக்கம் இழுத்து தமது சார்பில் தேர்தலில் வேட்பாளராக நிறுத்துவதற்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் ஐக்கிய தேசிய முன்னணியும் தீவிரமாக முயற்சி செய்துவருவதாக இணையச் செய்தித்தளம் ஒன்றில் தகவல் வெளியாகியிருக்கிறது.

இந்த இருதரப்புகளும் விடுத்த அழைப்பை வாசுதேவ நாணயக்கார நிராகரித்துவிட்டதாகவும் -

இந்தமுறையும் இடதுசாரிக் கூட்டணி சார்பிலேயே தேர்தலில் போட்டியிட இருப்பதாக அவர் தெரிவித்துவிட்டதாகவும் -

இணையச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது (ஐ)

### தமிழ்க் கட்சிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்க் கட்சிகளின் கூட்டணியில் இணையவுள்ள ரெலோ,, ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஸ் அணி) ஆகியன கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்கு இழைத்த கொடுமைகளை இன்னமும் அவர்கள் மறக்கவில்லை என்றும் -

தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்க் காங்கிரஸ் ஆகியன நிரந்தரமான கொள்கைகள் அற்ற கட்சிகள் என்றே தமிழ் மக்கள் கருதுகினறனர் என்றும் -

மகேஸ்வரன் ரணிலிடம் தெரிவித்திருக்கிறார்.

"சுயேட்சையாக - தன்னிச்சையாக - மக்களுக்கு சேவையாற்ற வேண்டுமானால் தனித்துப் போட்டியிட வேண்டும். அதற்கு அனுமதி வழங்காவிட்டால் அரசியலில் இருந்து ஒதுக்கிக் கொள்வேன்" - என்று மகேஸ்வரன் ரணிலிடம் தெரிவித்ததாக அறியவந்தது. (ஐ-3)

### ஆப்கான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளுப்பிட்டிப் பகுதியில் அமெரிக்க, பிரிட்டிஷ் தூதரகங்கள் அமைந்துள்ளதால் பொலீஸார் ஆர்ப்பாட்டக்காரரை முன்னேறவிடாது தடுத்தனர்.

பொலீஸாரின் தடைகளை மீறிச் செல்லமுயன்ற ஆர்ப்பாட்டகாரர்கள் மீது கண்ணீர்ப்புகைக் குண்டுகள் வீசப்பட்டன. இதனால் அவர்கள் கலைந்து சென்றனர்.

புத்தளம், கண்டி மற்றும் கிழக்கு மாகாணம் உட்பட முஸ்லிம்கள் அதிகமாக வாழும் பகுதிகளிலும் நேற்று அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. (ஐ-3)

# தம்புள்ள கிரிக்கெட் போட்டிக்கான யாழ். வீரர்கள் அணி தெரிவு

யாழ்ப்பாணம்,ஒக்.13

தம்புள்ளவில் எதிர்வரும் 20ஆம், 21ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள 15 வயதுக்குட்பட்ட பாடசாலை அணிகளின் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் பங்குபற்றவுள்ள யாழ்.அணி நேற்றுத் தெரிவுசெய்யப்பட்டது.

அந்த அணியில் இடம்பெறும் வீரர்களின் விவரம் வருமாறு:-

கே.றோஹரான் (அணித்தலைவர் - யாழ்.மத்தி.), ரி.மதன்ராஜ் (உதவித் தலைவர் - சென்.ஜோண்ஸ்), வி.சத்தியப்பிரசன்னா (ஸ்ரான்லி), லெரிங் லியான் (சென்.பற்றிக்ஸ்), கே.அருண்குமார் (யாழ்.இந்து), ரி.சுகந்தன் (சென்.பற்றிக்ஸ்), ஆர்.ரமணன் (ஹாட்லி), எஸ்.சிவசங்கர் (கொக்குவில் இந்து), ஏ.ஜனார்த்தனா (கொக்குவில் இந்து), எஸ்.கிருபாவன் (கொக்குவில் இந்து), வி.லவசாந்த் (கொக்குவில் இந்து), கே.மகேந்திரன் (ஹாட்லி), கே.ஜெனீதன் (சென்.ஜோண்ஸ்), ஜி.கபில்ஸ்தன் (சென்.பற்றிக்ஸ்). (ஐ-3)

### விடுதலை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டமிட்டுள்ளார். ஐதேகவின் நாட்டை புலிகளிடம் தாரைவார்க்கப் போகின்றார்கள். புலியும் யானையும் சேர்ந்து நாட்டை நாசமாக்கியுள்ளன.

தேர்தல் வன்முறைக்குப் பெயர் போன எஸ்.பி.திஸநாயக்கா, சட்டவிரோத காணி கொள்வனவில் பெயர் பெற்ற விஜேபால மெண்டிஸ், தங்கம் கடத்துவதில் தலைசிறந்த எதிர்வீர பிரேமரத்தின ஆகியோருடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிடவுள்ள ஐ.தே.க., பிரிவினைவாதிகளுக்கு நாட்டைத் தாரைவார்க்கப் போகின்றது.

பொ.ஐ.மு. அரசு ஐ.தே.கவின் கொள்கையை அப்படியே கடைப்பிடித்ததினாலேதான் இந்த அரசியல் அவலநிலை ஏற்பட்டது. ஐ.தே.க. தலைமையிலான கூட்டுமுன்னணி கொழும்பு நகரில் உள்ள குப்பைத் தொட்டி போன்றது. விதம் விதமான குப்பைகள் ஒன்றுசேர்ந்துள்ளன - என்று விமல் வீரவன்ஸ தெரிவித்தார். (ஐ-3)

### தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலத்தை நிரூபிக்க வேண்டிய காலம் இப்போது உருவாயிருக்கிறது.

ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) ஆகியன இணைந்து அமைக்கவிருக்கும் அணியில் போட்டியிடுவதாயின் வீணைச்சின்னத்தை ஏற்கவேண்டும் என்று ஈ.பி.டி.பி. விதித்துள்ள நிபந்தனையை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் சித்தார்த்தன் தெரிவித்தார். (ஐ-3)

### அரச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி இடைக்காலக் கொடுப்பனவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது என்று பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே அரச ஊழியர்களுக்கு ஆயிரம் ரூபாவும், ஓய்வூதியர்களுக்கு 500 ரூபாவும் இடைக்காலப் படியாக வழங்கப்படுவது தெரிந்ததே. எனினும் தற்போது புதிதாக அறிவிக்கப்பட்டிருக்கும் கொடுப்பனவு ஏற்கனவே வழங்கப்படும் கொடுப்பனவுக்குள் உள்ளடக்கப்பட்டதா அல்லது அதற்கு மேலதிகமாக வழங்கப்படவிருக்கிறதா என்பது உடனடியாகத் தெளிவுபடுத்தப்படவில்லை.

இதேவேளை -

தேர்தலுக்கு முன்னதாக மேலும் சில சலுகைகளை வழங்க அரசு நடவடிக்கை எடுத்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டில் இருந்து பொதிகளாக இறக்குமதி செய்யப்படும் சீமெந்தின் விலையை 25 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாகவும், மொத்த இறக்குமதி விலையை 10 சதவீதமாகவும் குறைக்கப் போவதாக அலவி மௌலானா அறிவித்துள்ளார். (ஐ-7)

## வவுனியாவில் கிளைமோர் கண்ணி மீட்பு!

வவுனியா, செட்டிக்குளம் பகுதியில் பொலீஸ் நிலையத்துக்குச் சமீபமாக கிளைமோர் கண்ணி ஒன்று நேற்றுமுன்தினம் இரவு பொலீஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

அதைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் தேடுதல் நடத்திய பொலீஸார் ஐந்து தமிழ் இளைஞர்களைக் கைது செய்துள்ளனர். (ஐ-3)

### கூட்டணி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை -

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேசியப் பட்டியல் எம்.பி. பதவிக்கு கூட்டணியின் மூத்த தலைவர் எம்.சிவசிதம்பரத்தையும் நியமிக்க வேண்டும் என்று கட்சிக்குள் ஒரு சாரார் வற்புறுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிவசிதம்பரம் தற்சமயம் தமிழகத்தில் தங்கி சிகிச்சைபெற்று வருவது தெரிந்ததே. (ஐ-3-7)

### கூட்டணி, ரெலோ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளது.

அமரர் குமார் பொன்னம்பலத்தின் இலட்சியங்களை நிறைவுசெய்யும் நோக்குடன் செயற்படும் காங்கிரஸ், யாழ்.மாவட்டத்தில் தனித்துவமாகத் தேர்தலில் போட்டியிட முடிவு செய்துள்ளது என்று அக்கட்சியின் தலைவர் அ.விநாயகமூர்த்தி கூறினார்.

யாழ்.மாவட்டத்தில் தமது கட்சி தனித்துப் போட்டியிட முடிவு செய்துள்ளது என்றும் -

எதிர்வரும் 20 ஆம் திகதி தமது அணியினர் யாழ்ப்பாணம் சென்று நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்யவிருப்பதாகவும் -

அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு வெளியே மட்டக்களப்பு, திருமலை, வன்னி, அம்பாறை மாவட்டங்களில் தமிழர் பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்ய அங்கு ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் கூட்டாகப் போட்டியிடத் தமது அமைப்பு முன்வரும் என்றும் விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

இதேவேளை -

ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ் (வரதர் அணி) ஆகியன இம்முறை இணைந்து ஓரணியில் போட்டியிடுவது தொடர்பாக ஆராய்ந்து வருவதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டது.

இந்தக் கட்சிகளின் பிரமுகர்கள் தமக்குள் சந்தித்துக் கலந்துரையாடி வருவதாகவும் -

கூட்டணி உருவாகும் பட்சத்தில் வீணைச் சின்னமே பொதுச்சின்னமாக இருக்கவேண்டும் என்று ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா நிபந்தனை விதித்துள்ளதாகவும் அந்தச் செய்தி ஏஜென்ஸி மேலும் தகவல் வெளியிட்டுள்ளது.

இதற்கிடையில் -

அம்பாறை மாவட்டத்தில் கடந்த தேர்தலில் ஈ.பி.டி.பியின் ஆதரவுடன் போட்டியிட்டு வெற்றிபெற்ற சங்கர் குணசேகரம் இம்முறை ஐ.தே.கட்சியில் போட்டியிட முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது. (ஐ-3-7)


விற்பனையாகின்றன!

O/L பரீட்சை வழிகாட்டி

இதழ்கள்: 1 2 3 4 விலை: ரூபா 60/=

பூபாலசிங்கம் புத்தகசாலை

இல. 4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C/18672)



BRIGHTMAN

பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்நகர்

சரளமாக உரையாட

பீரிவு 5 சிங்களம்

By:- லீலாகிருஷ்ணன்

ஆரம்பம்: 14.10.2001

Sun. 4 p.m. (93394)



MCS

324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

Be a best Computer Programmer

Visual Basic, C++, HTML.JAVA.C#

Special Offer Monthly 400 Rs.


## கண்ணீர் அஞ்சலி

மூளாய் இந்து இளைஞர் மன்றத்தின் நிறுவுநர்களில் ஒருவரும்
எமது மன்ற நிர்வாக சபை உறுப்பினராகிய
வி.கனகசபாபதி (பாபு)
அவர்களின் தந்தை

**பொன்னம்பலம் விஜயரத்தினம் (வேவி)**

அவர்களின் திடீர் மறைவு எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரது மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மூளாய். (C/18691) - இந்து இளைஞர் மன்றம்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.10.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.